விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 16 செவ்வாய்க்கிழமை (29.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041

# அமைச்சரவை நேற்று விரிவாக்கம்

## தமிழர் புறக்கணிப்பு



(கொழும்பு), ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் மற்றுமொரு அமைச்சரவை விரிவாக்கம் நடந்துள்ளது. இதில் புதிதாக 10 அமைச்சர்களும் 6 துணை அமைச் சர்களும் செயற்திட்டங்களுக்கான 2 அமைச்சர்களுமாக 18 பேர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாவில் இலங்கை மீது புதிய தீர்மானம் கொண்டுவரப்படும்

### அமெரிக்கா அறிவிப்பு

ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

போர்க்கால குற்றங்கள் தொடர்பில் இலங்கைப் படையினர் மீது விசாரணை நடத்த வேண்டுமென்று இலங்கை அரசைப் பலவந்தப்படுத்தும் நோக்கோடு இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படும் என்று அமெரிக்கா உயர்மட்ட இராஜதந்திர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படும் என்று அமெரிக்க துணை இராஜாங்கச் (20ஆம் பக்கம் பார்க்க)

## டெசோ தீர்மான அறிக்கை பிராணாப்பிடம் கையளிப்பு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 47 உறுப்பு நாடுகளின் தூதர்களை சந்திக்க திட்டமிட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் மு.க. ஸ்ராலின் தலைமையிலான டெசோ அமைப்பினர், அதற்கு முன் ஏற்பாடாக நேற்றுக் காலை புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து டெசோ தீர்மான அறிக்கையைக் கையளித்துள்ளனர்.

இலங்கையில் தற்போது நிலவிவரும் சூழ்நிலைகள் மாறி இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல், (20ஆம் பக்கம் பார்க்க)

## தலைவலியை தீர்க்க தலையணையை மாற்றுவதா?

### அமைச்சரவை மாற்றம் குறித்து எதிர்க் கட்சிகள்

பொது மக்களுக்கு நிவாரணத்தை வழங்கக் கூடிய திட்டங்களுக்கு பதிலாக பொது மக்களை இன்னல்களுக்குள்ளாக்கும் திட்டங்களையே அரசாங்கம் அறிமுகப்படுத்தி உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக இக்குற்றச்சாட்டினை வெளிப்படுத்தினார்.

அரசாங்கம் தமது திறனற்ற தன்மையை மறைக்கும் நோக்கிலேயே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

தலைவலிக்கு தலையணையினை மாற்றுவதுபோல, (20ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள, முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னரே வடக்கு தேர்தல்–சோபித தேரர்

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைக்கு நடத்தப்படும் தேர்தல் 1981ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு அமைய சிங்கள, முஸ்லிம் மக்கள் மீள்குடியேறிய பின்னரே நடத்தப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இருந்து விரட்டப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களை மீள குடியேற்றாமல் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால், வடக்கில் தமிழ் மக்கள் மாத்திரமே குடியேற வேண்டும் என்ற மாயை உறுதிப்படுத்தப்பட்டுவிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் நல்லது.எனினும் அதனை நடத்த முதல் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியொன்று உள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க குழு ரணிலுடன் சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்கத் தூதுகுழுவினர் நேற்று பிற்பகல் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளனர்.

இதன்போது இலங்கையின் மனித உரிமை தொடர்பில் விரிவாக பேசப்பட்டதாக ஐ.தே. கட்சியின் ஊடகப் பிரிவு செய்தி தெரிவித்துள்ளது.

அதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவது தொடர்பில் இலங்கை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் எதிர்க் கட்சித் தலைவர் விளக்கம் ஒன்றையும் வழங்கியுள்ளார்.

இதேபோன்று, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பிலான குற்றவியல் பிரேரணை மற்றும் அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்து; அமெரிக்க பிரதிநிதிகள் எதிர்க் கட்சித் தலைவரை வினவியதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகத்துறை தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மக்களின் வாழ்வில் இராணுவ தலையீடு அதிகரிப்பு

### அவுஸ்திரேலிய குழுவிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் அன்றாட வாழ்வில் இராணுவத்தினரின் குறுக்கீடு தொடர்ந்தும் அதிகரித்துள்ளது என யாழ்ப்பாணம் வருகை தந்த அவுஸ்திரேலிய குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைத்துள்ளது.

அவுஸ்திரேலிய எதிர்க் கட்சியின் பிரதித் தலைவர் ஜூலியா பிஷப் தலைமையிலான அவுஸ்திரேலியக் குழுவினர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

காலை 9.45 மணியளவில் மல்லாகம் கோணப்புலத்திற்கு சென்று மீள்குடி (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சைக்கிள் ஓட்டப்போட்டியில் பாடசாலை மாணவன் மரணம்

(மன்னார்)

மன்னாரில் பிரபல பாடசாலையில் இடம் பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட மாணவன் கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு குறித்த பாடசாலையில் சைக்கிள் ஓட்டப்போட்டி நடத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொண்ட தரம் 12-ல் கலைப்பிரிவில் கல்வி பயிலும் டி.திணோஷன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மன்னார் வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

# மரதன் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு இன்று காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டி நிகழ்வு பாடசாலை முன்றலில் இடம்பெறவுள்ளதாக கல்லூரி அதிபர் கு.வேல் சிவானந்தன் தெரிவித்துள்ளார்.


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**VACANCY**

**POST OF CHIEF SECURITY OFFICER, GRADE II**

Applications are invited by me up to 26.02.2013 from suitably qualified persons for the post of chief Security Officer, Grade II.

QUALIFICATIONS:

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

OR

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than Five(05) years experience in Security work.

OR

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the university Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

AGE: Not more than 45 Years.

Salary Scale: U-EX 1(II) 2006 A
26,020-3X585-27,775(EB) 28,420; 6X645; 6X585-35,800/-p.m.

Selection: By structured Interview

Applications should be on prescribed forms issued by the university. Application forms and particulars for the above post should be obtained from the office of the senior Assistant Registrar/Establishments (Non-Academic) of this University on a payment of Rs.100/- for each application form at the people's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order/Postal Order to the value of Rs.100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs.5/-Stamped envelope of 23X10 c.m in size.

The envelope containing duly filled application form must bear "Post of Chief Security Officer" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 26.02.2013.

STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna,
23.01.2013.


# விசாரணையில் பங்கேற்க மாட்டேன் -மொஹான்

(கொழும்பு)

அமைச்சர் றிசாட் பதியுதீனால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளில் நான் பங்குபற்ற மாட்டேன் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்துள்ளார்.

மன்னார் நீதவானை அச்சுறுத்தினார் என அமைச்சர் றிசாட் பதியூதீனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக அமைச்சர் உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை குழுவிலேயே தான் பங்கேற்க மாட்டேன் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பினால் நீதியரசர்களின் குழுவினை மாற்றி அமைப்பதற்காக எதிர் வரும் மார்ச் 18-ம் திகதி வரை வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டது. (செ-11)

# தேர்தல் வாக்குச்சீட்டு மீட்பு; முழுப் பொறுப்பும் எனதே - தேசப்பிரிய

(கொழும்பு)

கண்டெடுக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் வாக்குகளாக கணக்கில் எடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் என்பதை உறுதிப்படுத்திய தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கவனக்குறைவால் ஏற்பட்டமைக்கான முழுப் பொறுப்பையும் தான் ஏற்றுக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

வா்க்குச் சீட்டுகள் உண்மையானவை அவை வாக்குகளாக கணக்கில் எடுக்கப்பட்டவை என்பதனை நான் உறுதிப்படுத்துவேன். லொறி சாரதியின் கவனக்குறைவால் இந்த வாக்குச் சீட்டுக்கள் விழுந்துள்ளன.

இந்த விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதனால் அது தொடர்பில் மேலதிக தகவல்களை தெரிவிக்க முடியாது என்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது அன்னம் சின்னத்திற்கு புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் கலகெடிஹேன பிரதேசத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டேகொட தெரிவித்துள்ளார்.

அன்னம் சின்னத்திற்கு புள்ளடியிடப்பட்ட சுமார் 300 வாக்குச் சீட்டுகளே இவ்வாறு கலகெடிஹேன பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றுக்கருகில் இருந்து மீட்கப்பட்டதாகவும் இந்த வாக்குச்சீட்டுகள் நுவரெலியா மாவட்டத்திற்கு சொந்தமானவை என்றும் கடந்த 25ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

இதேவேளை நுவரெலியா மாவட்டத்தில் வாக்களிக்கப்பட்ட ஒருதொகையான வாக்குச் சீட்டுகள் நாட்டின் மற்றுமொரு மூலையிலிருந்து மீட்கப்பட்டது எவ்வாறு என்று கேள்வியெழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டேகொட இது தொடர்பில் நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும் இது தொடர்பில் எவ்விதமான முறைப்பாடுகளும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லை என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த் ஜயக்கொடி தெரிவித்திருக்கிறார்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பொது எதிரணியின் வேட்பாளராக அன்னம் சின்னத்தில் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# வெட்டுக்காயங்களுடன் முச்சக்கரவண்டியில் சடலம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை மல்வத்தை பிரதேசத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் வெட்டுக்காயங்களுடன் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மல்வத்தை இரண்டாம்பிரிவு புது நகரத்தைச் சேர்ந்த சீனித்தம்பி பிரேமநாதன் (வயது 40) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குறித்த நபர் தமது வீட்டிலிருந்த போது நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் வாடகைக்கு முச்சக்கர வண்டியை மல்லிகைத்தீவு பிரதேசத்திற்கு கொண்டு வருமாறு கூறி கையடக்கத் தொலை பேசிக்கு அழைப்பொன்று வந்துள்ளது.

இதனையடுத்து மேற்படி நபர் தனது முச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு மல்லிகத்தீவு பிரதேசத்திற்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு சென்றவர் மல்லிகைத்தீவு ம்யானத்திற்கு அருகில் வீதியில் நேற்றுக்காலை 6 மணிக்கு கைகள் மற்றும் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் முச்சக்கர வண்டியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந் நபரின் சடலம் அம்பாறை போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர்களின் கைவிரல்களை வெட்டி மோதிரம் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன கொள்ளையடிக்கப்பட்டுச் சென்றுள்ளதாக சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சம்மாந்துறைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (செ-11)

# பொதுக் கூட்டம்

(மானிப்பாய்)

வலி.தென் மேற்கு பிரதேச சபைக்கான மாதாந்த பொதுக்கூட்டம் நாளைபுதன் கிழமை பிரதேசசபை மண்டபத்தில் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-5,23)

# புதிய அதிகாரி தெரிவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேசத்தின் புதிய இளைஞர் சேவை அதிகாரியாக ச.லக்ஷன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது வரையில்காலமும் சண்டிலிப்பாய் பிரதேசத்தின் இளைஞர் சேவை அதிகாரியாக பணியாற்றிய க.குணேஷ் வேலணைக்கு இடமாற்றம் பெற்று சென்றதை அடுத்தே கடந்த 23ஆம் திகதி புதன் கிழமை முதல் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் மேற்படி லக்ஷன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (செ-5,23)

# மரதனோட்ட போட்டி

(மானிப்பாய்)

யாழ்.இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்தப்படும் மரதன் ஓட்டப்போட்டி நாளை புதன் கிழமை காலை 6.30 மணிக்கு கல்லூரி மைதானத்திலிருந்து ஆரம்பிக்கிறது.

இரு பிரிவுகளாக நடைபெறும் இம் மரதன் ஓட்டம் மைதானத்தில் இருந்து ஆரம்பித்து பரமேஸ்வரா சந்தியூடாக நாச்சிமார் கோவிலை அடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக சிவலிங்கப்பிள்ளையார் கோவிலை அடைந்து அங்கிருந்து மீண்டும் மைதானத்தை சென்றடையவுள்ளது. (செ-5,23)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நெப்போலியன்

நெப்போலியன் தன்னுடைய வெள்ளைக் குதிரையில் அமர்ந்து கொண்டே தூங்குவார். இதை கேள்விப்படும் போதெல்லாம், "அது எப்படி முடியும்? அது ஆபத்து இல்லையா? தவறி கீழே விழுந்தால் என்ன நடக்கும்? நிறைய கடமைகள் காத்துக் கொண்டிருக்கும் நிலையில் நிம்மதியாக அவரால் எப்படி தூங்க முடிந்தது? அதுவும் குதிரை மேல் உட்கார்ந்து கொண்டே எப்படி தூங்கினார்?" என்று கேட்கத் தோன்றுகின்றது.

இதற்கு நெப்போலியன் விளக்கம் கொடுத்திருக்கிறார்.

"புறாக்கூண்டில் வரிசையாக அறைகள் இருப்பதைப் போன்று என் மூளையில் கடமைகளை வரிசையாக அடுக்கி வைத்திருப்பேன். எந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமோ அந்தக் கடமை இருக்கும் அறைக் கதவை அப் போதைக்குத் திறப்பேன். அதைப்பற்றி மட்டும் தான் யோசனை செய்வேன். மற்ற கடமைகள் இருக்கும் அறைக் கதவையெல்லாம் மூடி விடுவேன். அதைப் புற்றி எதுவும் யோசிப்பதில்லை.

"ஆதலால் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நான் குழப்பம் அடைவதில்லை. வீணான எண்ணங்களுக்கு என் மனதில் இடமுமில்லை. தூங்க வேண்டும் என்று நினைக்கும் போது நான் எல்லா சிந்தனை அறைகளையும் மூடி விடுவேன். உடனே தூங்கி விடுவேன்!" என்று தன்னைப்பற்றிய ஒரு குறிப்பில் நெப்போலியன் தெரிவித்திருக்கிறார்.

சிறிய வயதில் நெப்போலியன் ஒரு இராணுவ விடுதியில் படித்து வந்தார். அச் சமயம் அவருடன் அதே அறையில் தங்கியிருந்த இன்னொரு மாணவனுடைய அழகான பை ஒன்று காணாமல் போய்விட்டது. உடனே அந்தப் பையன் அதைப் பற்றி மேலதிகாரியிடம் புகார் செய்தான்.

அவனிடம் மேலதிகாரி, "உனக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?" என்று கேட்டார். அதற்கு அப் பையன், "எனக்கு நெப்போலியன் மீதுதான் சந்தேகம்!" என்றான். உடனே அந்த அதிகாரி நெப்போலியனை தன் அறைக்குள் அழைத்தார். நெப்போலியனை அதிகாரி விசாரிக்காமல், உடனே கம்பு கொண்டு கண் மண் தெரியாமல் அடித்தார்.

"ஏன் திருடினாய்? இனிமேல் அப்படிச் செய்வாயா?" என்று கேட்டபடியே அதிகாரி நெப்போலியனை பலமாக அடித்து விட்டார். அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு நெப்போலியன் அமைதியாக இருந்தார். அதற்குப்பின் கொடுத்த தண்டனையையும் வாங்கிக் கொண்டு அவர் பொறுமையாக இருந்தார். எதுவும் பேசவில்லை.

சில நாட்களுக்குப் பின் புகார் செய்த மாணவன் அதிகாரியிடம் ஓடி வந்து, "ஐயா! என் பையை அன்றைக்கு திருடியது நெப்போலியன் இல்லை. வேறு ஒருவன். இப்போதுதான் எனக்கு உண்மை தெரிந்தது. தெரியாமல் நெப்போலியன் மீது புகார் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று தெரிவித்தான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் ஆசிரியருக்கு ஆச்சரியமாகி விட்டது. உடனே அவர் நெப்போலியனை அழைத்து, "ஏன் தம்பி! உனக்கு என்ன பைத்தியமா? நீ என்ன முட்டாளா? அன்றைய தினம் உன்னை அந்த அடி அடித்தேன்; அப்போதே நீ உண்மையை சொல்வது தானே?" என்று கேட்டார்.

அதற்கு நெப்போலியன் "ஐயா நீங்கள் என்னை அடிக்கும் முன்பே கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன். அடித்துக் கொண்டே கேட்டீர்கள். நான் இல்லை! என்று சொல்லியிருந்தால் அடிக்குப் பயந்து நான் அப்படிச் சொன்னதாக நினைப்பீர்கள். நான் பயந்ததாக யாரும் நினைக்கக்கூடாது. அதை விட அடி வாங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை" என்றார்.

நெப்போலியன் கூறிய பதிலை கேட்டு அதிகாரி அப்படியே அசந்து விட்டார். தான் பயந்ததாகவும் கூட யாரும் நினைக்கக்கூடாது என்று நெப்போலியன் நினைத்திருக்கிறார் என்றால், அதற்கு அவரிடம் எவ்வளவு மனோதிடம் இருக்க வேண்டும்?

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சித்தர்களின் போதனைகளை ஏற்பதில் இளைய தலைமுறை அசண்டையீனம்

## ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்



(யாழ்ப்பாணம்)

ஈழத்து சித்தர்களுக்கு அமெரிக்காவில் சிலை வைக்கப்பட்டுள்ளது. அவர்களின் சிந்தனைகளும் சமய வாழ்க்கை முறையும் அங்குள்ளவர்களுக்கு போதிக்கப்படுகிறது. ஆனால், இங்குள்ள இளைய தலைமுறையினரோ மேலைத்தேய கலாசார மோகத்தில் உள்ளனர் என ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கவலையுடன் தெரிவித்தார்.

சிவபூமி அறக்கட்டளையினால் சைவ வளர்ச்சிக்கும் சமூக உதவிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் குப்பிளானில் அமைக்கப்பட்ட சிவபூமி ஞான ஆச்சிரம திறப்பு விழா நேற்று சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிவபூமி ஆச்சிரமத்தை திறந்து வைத்து அருளுரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எமது சமுதாயம் இப்பொழுதும் புத்தக கல்வியில்தான் தங்கியுள்ளது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அத்தோடு தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை வெளியில் சொல்லாமல் தன் மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டு வாழ்கின்றனர். தமது மனச்சுமையை இறக்கி வைக்க வேண்டும்.

மனச்சுமையை இறக்கி வைக்கும் வைத்தியசாலைகள் ஆச்சிரமங்கள் இங்கு வந்தால் மனச்சுமைகள் நீங்கும். தற்போது இங்கு தூக்கில் தொங்கிய நிலையிலும் கிணற்றிலிருந்தும் சடலங்கள் மீட்கப்படுகின்றன.

இவையெல்லாம் மனச்சுமையால் ஏற்பட்டவை. அண்மையில் யாழ்ப்பாணத்தில் கூட இவ்வாறு சடலங்கள் மீட்கப்பட்டன.

என்னைப் பொறுத்தவரை தமிழர்கள் தான் தங்களுடைய பிரச்சினைகளை வெளியில் சொல்லாமல் தமது மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டு வாழ்கின்றனர். அத்தோடு மற்றவர்களுடைய பிரச்சினைகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

மனதைதிறந்துபேசவேண்டும். மனச்சுமையை இறக்கி வைக்க வேண்டும். மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும். அவ்வாறானதொரு வாழ்க்கைக்கு ஆச்சிரமங்கள் உதவி செய்கின்றன.

மேலும் ஈழத்தில் வாழ்ந்த சித்தர்களின் மகிமையையும் அவர்களின் ஞானக் கருத்துக்களையும் போதனைகளையும் அறிந்துகொள்வதற்கு அமெரிக்கா போன்ற மேலைத்தேயநாடுகளில் உள்ள இளைஞர்கள் ஆர்வமாகவுள்ளனர். ஈழத்து சித்தர்களுக்கு சிலை வைத்து அவர்களின் பெருமையை உலகறியச் செய்கின்றனர். ஆனால், இங்குள்ளவர்களோ அவர்களை யார் என்றே தெரியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அவர்களைப் பற்றி அறிய ஆர்வமற்றவர்களாகவுள்ளனர்.

சித்தர்களுக்கு சிலையில்லை. அவர்களின் பெருமை பற்றி பேசுவதற்கு எவரும் முன்வருவதில்லை.

எத்தனையோ சித்தர்கள் வாழ்ந்த இங்கு சமய வாழ்க்கையை போதிப்பதற்கும் அதனைப் பின்பற்றுவதற்கும் இளையதலைமுறைதயாராக இல்லீல.

மேலைத்தேய கலாசாரத்திலும் உற்பத்தி பொருட்களின் மோகத்திலும் உள்ளனர் என பல விடயங்களை கவலையுடன் தெரிவித்த சுவாமிகள் அமெரிக்காவில் சிவபூமி மடம் அமைக்கும் எண்ணம் நிறைவேறும் எனவும் தெரிவித்ததோடு மனக்குறையுடன் வந்தால் ஆச்சிரமங்கள் ஆற்றுப்படுத்தும் நிலையமாக அமையும் ஆச்சிரமங்களை உரிய முறையில் பயன்படுத்தி அமைதியான வாழ்வினைப் பெற்றிடுங்கள் என மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 280 |
| தக்காளி | 100 | 120 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 90 | 100 | 120 |
| கரட் | 180 | 180 | 200 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 70 | 180 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120-150 | 120 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 190 | 240 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80-100 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120-160 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 200 | 180 | 160 | 160 |
| பீற்றூட் | 120 | 120 | 140 | 140 |
| கறிமிளகாய் | 240 | 240 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 400 | -- | -- |
| போஞ்சி | 130 | 100 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 250 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 20-35 | 40-50 | 30 | 30 |
| தேசிக்காய் | 20-40 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 45 | 40-45 |
| இராசவள்ளி | 90-110 | 100 | 120 | 130 |
| வெங்காயப்பூ | 150 | 240 | 100 | 100 |

# இராசி பலன்

29.01.2013
(தை 16, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
துதியை பிற்பகல் 12.02 மணிவரை
மகம் முன்னிரவு 7.12 மணிவரை
இராகுகாலம் 3.36-5.06 மணிவரை
சுபநேரம் 11.06-12.36 மணிவரை

**மேடம்** இனிமையான நாள், அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முன்வருவீர்கள், செய்தொழிலில் நன்மையுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**இடபம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், காலை நேரத்திலேயே சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்புகளால் நலம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் புதிய நட்புகள் உருவாகலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** உங்களின் சிறந்த யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அனுபவத்தின் வாயிலாக புதிய தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரிக்கும், சிறு ஆதாயமும் பெறுவீர்கள், சுப காரியங்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள், ஆனைமுகனை வழிபட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**துலாம்** எடுத்த காரியம் எளிதில் கைகூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்** ஆரோக்கியமான நாள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்களால் ஆதாயமுண்டு, உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம், போசன சுகமுண்டு, கௌரவக்குறைவான சில சம்பவங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கும்பம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு, தனவரவுகள் திருப்திகரமாக அமையும், அபூர்வ சந்திப்புண்டு.

**மீனம்** பகைவர்கள் விலகுவர், காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம், நோய் குணமாகும், தொழில் விருத்தியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்வி வலயத்திற்குட்பட்ட யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் தரம் 1ஏபி பாடசாலையினது அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

மேற்படி பதவிக்கு யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் அதிபர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் வலிகாம வலயத்தினைச் சேர்ந்த அதிபர் சேவை தரம் 2-II ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும். அத்துடன் விண்ணப்பிக்கும் அதிபர்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் குறைந்தது 3 வருடங்களான சேவையினைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)



நன்றி:- ஐலண்ட்

# இலங்கையின் வளத்தை பயன்படுத்தி பொருளாதாரத்தை ஈட்டுங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலிய நாட்டிற்கு மக்கள் வருவதை கட்டுப்படுத்துவதே எமது பிரதான நோக்கம் என யாழ்.வந்த அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் பிரதித்தலைவர் ஜீலியா பிஷப் தெளிவாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் பிரதித்தலைவர் தலைமையிலான குழுவினரிடம் யாழ்.ஊடகவியலாளர்கள் சிலர் கேள்வியெழுப்பினர். அதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளது என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டபோது அதற்கு அவர் தமிழ் மக்களிற்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றினை பெற்றுக் கொடுப்பதே எமது விருப்பமாகும். அதற்கு இரு இனங்களும் ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டியது அவசியமாகும்.

## சட்டவிரோதமான பயணம் வேண்டாம்; ஆஸி.குழுவினர் வலியுறுத்தல்

அவுஸ்திரேலிய நாட்டிற்கு கடல் மூலமாக புலம் பெயருகின்ற இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் உங்களுடைய நாடு எவ்வாறாக நடவடிக்கை எடுக்கின்றது எனக் கேட்டபோது,

அவ்வாறான சட்ட விரோத புலம்பெயர்வினை தடுப்பதற்கே அவுஸ்திரேலிய அரசு செயற்பட்டு வருகின்றது.

இலங்கை மட்டுமல்லாது ஏனைய வளர்முக நாட்டு மக்களின் சட்டவிரோத புலப்பெயர்வினை இல்லாதொழிக்க அல்லது கட்டுப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

உயிர் அச்சுறுத்தல் கொண்ட இந்நீண்ட சட்டவிரோத பயணத்தை மக்கள் கைவிட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

போர் முடிந்துள்ள பிற்பாடும் இங்கு சமாதானத்திற்கான அணுகுமுறைகள் காணப்படவில்லையே எனக் கூறியபோது,

இலங்கை ஒரு அழகான நாடு. ஏராளமான வளங்கள் இங்கு உண்டு. அவற்றினை பயன்படுத்தி பொருளாதாரத்தினை ஈட்டி மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த முடியும்.

நாட்டில் நடைபெற்ற துரதிர்ஷ்டமான போரினால் அவை பாதிப்படைந்துள்ளன. அவற்றினை மீளவும் கட்டியெழுப்புவதற்கு இங்குள்ளவர்கள் பாடுபடல் வேண்டும.

அவுஸ்திரேலிய அரசாங்கம் புலம்பெயர்ந்து வரும் தமிழர்களினை தமது நாட்டிற்குள் அனுமதிக்காமைக்கு காரணம் என்ன? அதாவது முரண்பட்ட விதத்தில் செயற்படுவது ஏன் எனக் கேட்டபோது,

அது எமது நாட்டின் சட்டவிதிமுறையாகும். சட்டவிரோத புலம்பெயர்வாளர்களினை கட்டுப்படுத்த எமது சட்டவரைபிற்கு உட்பட்டதுமாகும் என்றார்.

ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் மிகவும் பொறுமையுடன் விளக்கமளித்த அவர் உள்ளிட்ட குழுவினர் பின்னர் கிளிநொச்சிக்கு புறப்பட்டு சென்றனர். (அ-4)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி திருநெல்வேலிக்கிளை முகாமையாளர் எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

## வி.கழகங்களை பதிவு செய்தல்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் புதிதாக மீண்டும் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலகத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற விளையாட்டு கழகங்களிற்கான ஒன்றுகூடலிலேயே மேற்படி பதிவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் பதிவு செய்யும் விளையாட்டு கழகங்கள் அனைத்து போட்டிகளிலும் பங்குகொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-18)

# நெடுந்தீவு-முகிலனின் 10 ஆவது நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு-முகிலனின் 10 ஆவது தொகுதியான நீ விளையாடுவாய்தானே நான் பொம்மையாகின்றேன் புத்தக வெளியீடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டல் பூந்தோட்டத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கொழும்பு சூரியன் எவ்.எம் தலைமை அதிகாரி திரு.திருமதி எஸ்.நவநீதன் ஹம்ஸாநந்தி, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் டான் ரீவி நிகழ்ச்சி முகாமையாளர் வன்னிக் குரலோன் ஜெயச்சந்திரன், யாழ்ப்பாணம் சிகரம் பணிப்பாளர் கோ.றுஷாங்கன், வடமாகாண திரைப்பட சங்கத் தலைவர் ந.கேசவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.ரில்கோ ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.திலகராஜ், கரிகணன் பிறைவேட் லிமிட்டெட் முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார், யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தக சாலை வீ.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடக்கவுரையினை நா.கஜேந்திரன், அறிமுகவுரையினை யாழ்.இலக்கியக் குவியத் தலைவர் கவிஞர் வேலணையூர் தாஸ் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இந்நூலின் வெளியீட்டுரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் வடபிரதேச செயலாளர் த.ஶ்ரீபிரகாஸ் ஆற்ற முதற்பிரதியை யாழ்ப்பாணம் கஜமுகன் ஹாட்வெயார் ஈ.எஸ்.பி நாகரத்தினம் பெற்றுக் கொள்வார்.

நூலின் ஆய்வுரையை சூரியன் எவ்.எம். சிரேஷ்ட அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் ஆற்றவுள்ளார். (அ-9)

# பிம்சவிய திட்டத்தில் காணிப்பதிவுகள்

மண்ணின் மகிமை (பிம்சவிய) வேலைத்திட்டத்தின்கீழ் வடமாகாண காணி நிர்வாக திணைக்களத்தின் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக காணிப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் தங்கள் கிராம உத்தியோகத்தரிடம் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி கையளிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-3-30)




## மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி எஸ்.இராஜராஜேஸ்வரி வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

✶ ✶ ✶

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி கௌரி சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.நற்குணலிங்கன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி என்.மனோகரி வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

✶ ✶ ✶

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான கே.ஶ்ரீதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி இராஜராஜேஸ்வரி வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

✶ ✶ ✶

தேவரையாளி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் மா.நவநீதமணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் பொருளியலாளருமான த.தர்மசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி சுதர்சினி தர்மசீலன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் கல்லூரிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்திலிருந்து சேர்.பொன். இராமநாதனின் உருவச்சிலையை புனரமைப்பதற்கு விரைவான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

இராமநாதன் கல்லூரிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி விடயம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பணிப்புரையை விடுத்துள்ளார்.

கல்லூரியின் அபிவிருத்தி மற்றும் அங்குள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டதோடு முதற்கட்டமாக அங்கு நிறுவப்பட்ட சேர்.பொன். இராமநாதனின் உருவச்சிலையை மீண்டும் புனரமைப்பது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தினார்.

அத்துடன் கல்லூரியின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் எதிர்காலங்களில் கவனம் செலுத்தப்படும் அதேவேளை துறை சார்ந்தோரூடாக கல்லூரியின் மேம்பாட்டுக்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்ததுடன் கல்லூரி வளாகத்தின் சுத்தம் சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

அத்துடன் ஏனைய பொதுவான விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, வட மாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா. செல்வவடிவேல், கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணப்பிள்ளை உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினரும் உடனிருந்தனர். (அ-6)

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் 528 பிரிவின் கீழான விண்ணப்பம்

மரண சாதனமில்லாத மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத் தில்

நடராசா இராஜகுலசிங்கம்
இல.06, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
மரணமடைந்தவர்

நடராசா இராஜகுலசிங்கம்
இராஜபிரசாத்
இல.07, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
மனுதாரர்

வழ.இல.த/8/2010

எதிர்

1. மருதப்பு நடராசா கைம்பெண் கனகேஸ்வரி
இல.06, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
2. நடராசா இராஜகுலசிங்கம் கைம்பெண் சுசிலா
இல.07, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

எதிர்மனுதாரர்கள்

இவ்வழக்கு மேற்குறித்த மனுதாரரினால் மேற்குறித்த மரணமடைந்தாரின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் ஆட்சேபனை இருப்பின் இந்நீதிமன்றில் 2013 ஆம் ஆண்டு 02 மாதம் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

மன்றின் கட்டளைப்படி
(ஒப்பமிடப்பட்டுள்ளது)
பதிவாளர்
T.Surendran
Registrar.GR.1
Deputy Fiscal & J.P (All Island)
District Court, Jaffna.

வரைவு
(ஒப்பமிடப்பட்டுள்ளது)
மனுதாரர் சட்டத்தரணி

(1593)

## முகிழ் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டிற்கான *முகிழ்* சஞ்சிகையின் இதழ் 3 வெளிவந்துள்ளது.

இச்சஞ்சிகை கல்வியின் மேன்மை, இரட்டைக்காப்பியம், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் சில... படங்களின் பதிவுகள்...., கவிதைகள் போன்றவற்றைத் தாங்கி வெளிவந்துள்ளது. (அ-9)

## திரவ சவர்க்கார தயாரிப்பு பயிற்சி

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் கை கழுவுவதற்கான திரவ சவர்க்கார தயாரிப்பு பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது. இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிக்கு முன் தங்கள் பெயர்களை கரவெட்டிவிதாதாவள நிலையத்தில் பதிவுசெய்யுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (அ)

## இருளில் இருந்த ஊருக்கு ஒளி கிடைத்தது - நன்றிகள்


பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான

கௌரவ முருகேசு சந்திரகுமார்

அவர்களின் ஏற்பாட்டில்

- வெள்ளப் பாதிப்பில் இருந்து மீள வடிகாலமைப்பு
- நவீன கூட்டுறவுக் கடை
- தாரிடப்பட்ட வீதி
- தர்மக்கேணி அ.த.க.பாடசாலைத் தரமுயர்வு
- பூதவராயர் விளையாட்டுக் கழகத்திற்கு உதவி
- இன்று முதல் கிராமத்துக்கு மின் விநியோகம்

என எல்லாவற்றிற்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்



பச்சிலைப்பள்ளி - தர்மக்கேணி
சின்னத் தாழையடி
மக்கள்

(1589)


## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-1660)




29.01.1953 28.12.1953

## 60 ஆவது பிறந்த நாள், 40 ஆவது திருமண நாள் வாழ்த்துக்கள்

60 ஆவது பிறந்தநாள் மற்றும் 40 ஆண்டுகால திருமண நிறைவினை காணும்

### திரு.திருமதி மகேந்திரன் தவமணி

தம்பதியினரை எல்லாம் வல்ல இறைவன் துணைகொண்டு பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:

| பிள்ளைகள்: | மருமக்கள்: | பேரப்பிள்ளைகள்: |
| --- | --- | --- |
| மோகன் | மாலதி | தனுஸ் , நிலானி |
| திருமாறன் | ஜெயந்தினி | கஜிந், தாரிகா |
| தமிழ்ச்செழியன் | சுபாநந்தினி | மிதூரிக்கா |
| கிருபாகரன் | தாழுகா | கிருத்திக் |

'தவமகால்'
அண்ணா சிலையடி, கரணவாய் (1574)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1968 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>உயரம்: 5'5"<br>கி.பா: 15.5, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்:A/L<br>சாரதி (ஜேர்மன் PR)<br>தொ.இ: B -1068 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா:27, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: ஆசிரியை<br>(கல்வியியற் கல்லூரி BA)<br>தொ.இ: G -1132 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்:6'<br>கி.பா:62.25<br>தகைமை/தொழில்: A/L<br>பொலிஸ்<br>தொ.இ: B -1069 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 8.75<br>தகைமை/ தொழில்: சித்த வைத்திய பட்டதாரி<br>தொ.இ: G-1133 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா: 29.25<br>தகைமை/ தொழில்: A/L, Hardware Manager (தனியார்)<br>தொ.இ: B -1070 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4 , 2 இல் செவ்.<br>உயரம்: 5'2"<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1136 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>உயரம்: 5'7"<br>கி.பா: 69.25, 7 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L, இரு பிரபல கம்பனிகளின் Agent Distributor<br>தொ.இ: B -1071 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>உயரம்: 5'9"<br>தகைமை/ தொழில்: NHS தொழிலகம் வைத்தியசாலை (UKPR)<br>தொ.இ: G -1141 |


சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் மொழியாகிய தமிழ்மொழி தெரியாமைக்காக வெட்கப்படுகிறேன்

## அமைச்சர் டலஸ் வருத்தம்

இந்த நாட்டை முன்னர் ஆட்சி செய்தவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் வரலாற்றில் பாரிய தவறுகளை விட்டுள்ளனர். அதுவே பரஸ்பர மொழி தெரியாத பிரச்சினை முதல் யுத்தம் வரையான பல்வேறு அழிவுகளுக்கு எமது நாட்டை இட்டுச் சென்றுள்ளது என்று இளைஞர் விவகாரம் மற்றும் திறன் விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எனது சகோதர மொழியும் உங்களது தாய்மொழியுமாக இருக்கின்ற தமிழில் எழுதப்பட்ட தாள் ஒன்றின் உதவியின்றி உங்கள் முன்னிலையில் அம்மொழியில் பேச முடியாது இருக்கின்றமைக்காக நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். இந்த நிலைமைக்கு வித்திட்டவர்கள் கொள்கை வகுப்பாளர்கள்தான். அவர்கள் இந்த நாட்டின் வரலாற்றில் மிகப் பெரும் தவறுகளை விளைவித்துள்ளனர். அதன்வழி வந்த பரஸ்பர மொழி தெரியாமைதான் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் வரைக்குமான பல அழிவுகளுக்கு இட்டுச் சென்றது. நான் அரசியல்வாதி மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர். எனக்கே இரண்டாவது மொழி தெரியாது. இந் நிலைமையை அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்லக் கூடாது.

பல்கலைக்கழகம் மட்டும்தான் வாழ்க்கையல்ல. பட்டதாரியாக முன்னேறுவதற்கும் வாழ்க்கையில் சித்தியடைவதற்கும் பல வழிகள் இருக்கின்றன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இதேவேளை எமது தொழிற்பயிற்சி நிலையங்களை உங்களது காலடிக்கு கொண்டு வந்துள்ளது. ஜேர்மன் டெக் உயர் தொழில்நுட்ப கல்லூரி வளாகம் ஒன்றை கிளிநொச்சியில் நிறுவவும் திட்டமிட்டுள்ளோம் என்றார். (அ-2)

# ஆட்கடத்தல்காரர்களூடாக கனடாவுக்கு வராதீர்கள்

## கனேடிய குடிவரவு அமைச்சர் அறிவுரை

ஆட்கடத்தல்காரர்களூடாக கனடாவிற்கு வராதீர்கள் என அகதிகளுக்கு கனேடிய குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ப் பத்திரிகையாளர்களை நேற்று சந்தித்த கனேடிய குடிவரவு அமைச்சர் சட்டவிரோத கடத்தல்காரர்களால் அகதிகளாகக் கனடாவிற்கு கொண்டுவரப்பட்ட கப்பல்களை பின்னணியில் உள்ளடக்கிய தமிழ் பிரசுரங்களை ஊடகவியலாளர்களுக்கு கையளித்து மேற்படி தகவலை மக்களிடம் எடுத்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.


ஆட்கடத்தல்காரர்கள் மூலம் கனடா வர விரும்புவர்களுக்கு நாங்கள் விடுக்கும் காட்டமான செய்தி யாதெனில், தயவு செய்து அப்படியான வழிகளில் கனடா வரும் எண்ணத்தைக் கைவிட்டு விடுங்கள். உங்கள் பணத்தைக் கறக்கும் மேற்படி ஆட்கடத்தல்காரர்கள் உங்களை நட்டாற்றில் விடுகிறார்கள் என்பதையும் கவனத்தில் எடுங்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கனடா அகதிகள் விவகாரத்தில் காருண்யமாகச் செயற்படும் நாடு என்பது உண்மை. அதற்காக அந்த நடைமுறையை ஆட்கடத்தல்காரர்களினுடைய முயற்சிகளினூடாக மீற முயன்றால் நீங்கள் அவர்களிற்குக் கட்டிய காசை இழக்கின்றதைத் தவிர எதுவுமே உங்களிற்கு நடக்கப்போவதில்லை என்று தெரிவித்தார்.

கனேடிய பிரதமர் இந்த ஆட்கடத்தல் முயற்சிகளைத் தடுக்க 12 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதைக் குறிப்பிட்ட கனேடிய குடிவரவு அமைச்சர் கனேடிய உளப்பிரிவு மற்றும் பாதுகாப்புப் பிரிவுகள் ஏனைய நாடுகளிலுள்ள அந்த நாடுகளின் பாதுகாப்புத் துறைகளுடன் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்தார். (அ-2)

# ஆங்கிலமொழி சொற்பிரயோகமற்ற உரைகளை கேட்டதில் ஆனந்தம்

## இந்திய துணை தூதரக அதிகாரி



ஆங்கிலமொழி சொற்பிரயோகம் அற்ற உரைகளைக் கேட்டு ஆனந்தத்துடன் ஆச்சரியமும் அடைந்தேன் எனத் தெரிவித்தார்

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரி தட்ஷணாமூர்த்தி. சிவபூமி அறக்கட்டளையினால் சைவ வளர்ச்சிக்கும் சமூக உதவிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் குப்பிளானில் அமைக்கப்பட்ட சிவபூமி ஞானஆச்சிரம திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வி. மகாலிங்கம் சார்பாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் இடம்பெறும் நிகழ்வுகளில் கூட ஆங்கிலமொழி சொற்பிரயோகம் அற்ற உரைகளை நான் கேட்டதில்லை.

எனக்கு முன்பு இங்கு உரையாற்றியவர்கள் ஆங்கிலமொழி சொற்பிரயோகத்தை தவிர்த்து தமிழில் உரையாற்றியதைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தேன்.

அத்தோடு இந்தியாவில் இவ்வாறு ஆங்கிலமொழி சொற்பிரயோகம் அற்ற உரைகளைக் கேட்க முடியவில்லை என்பதை நினைக்கும் போது மனவருத்தமாகவுள்ளது.

மேலும் இந்தியா உதவிகளை செய்யத் தயாராகவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் ஏதோ இருக்கின்றோம். நீங்கள் ஏதோ இருப்பதாக நினைத்து கொண்டிருக்க வேண்டாம் எனத் தெரிவித்து தனது பேச்சை முடித்துக் கொண்டார். தனது உரையின் போது இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரி தட்ஷணாமூர்த்தியும் ஆங்கில சொற் பிரயோகத்தை பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# ரகளையில் ஈடுபட்ட நால்வர் கைதாகினர்

(கொழும்பு)

கண்டி- குருநாகல் இரவு சேவையில் ஈடுபடும் பேருந்தில் அமைதியின்மையை ஏற்படுத்திய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மதுபோதையில் பேருந்தில் பயணித்த மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படும் விதத்தில் செயற்பட்டதாக ஹலகெதர பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து ஒன்பது பாம்புகளும் இரண்டு மலைப்பாம்புகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் நால்வரும் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

# வறுமையான மாவட்டமாக மட்டக்களப்பு முன்னிலை

## மட்டு. அரச அதிபர் வருத்தம்

இலங்கையில் வறுமையான மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டமே முன்னிலை வகிக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு மாவட்ட மக்கள் தமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

**வறுமையற்றதோர் இலங்கை தேசம்** எனும் இலக்குடனான திவிநெகும வேலைத் திட்டத்தின் கீழ் **நிறைவான இல்லம், வளமான நாடு** என்னும் செயற்பாடு தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வு அருட்தந்தை பொன் தானா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்கழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த சிந்தனையின் **வறுமையற்றதோர் இலங்கை தேசம்** என்ற திட்டத்தின் கீழான இலக்கை அடைவதற்கு நாங்கள் நீண்டதூரம் பயணிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்தத் திவிநெகும திட்டத்தினை மாவட்டத்திலுள்ள அரசியல் தலைமைத்துவங்களில் ஊடாக திணைக்களங்களோடு இணைந்து பயன்தரும் திட்டமாக மாற்ற வேண்டும்.

வறுமை ஒழிப்பில் 13 ஆவது இடத்திலிருந்த இந்தியா இன்று மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளது. இலங்கை, மொறிஸியஸ் போன்ற நாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்பப்பட்டார்கள்

நாட்டிலுள்ள அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் பிரதேச வளங்களை எவ்வாறு செயற்படுத்தி மக்கள் தமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை அடிப்படையாக கொண்டு திவிநெகும திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரச தனியார் வங்கிகளுடன் நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதன் ஊடாக விவசாய கடன் மற்றும் சிறுதொழில் கடன் போன்றவற்றை மக்கள் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கத்தில் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த பயன்தரு திவிநெகும திட்டத்தை சரியாக பயன்படுத்த வேண்டும் என்றார். (அ-2)

# 4ஆயிரத்து 109 ஹெக்ரேயருக்கு அதிகமான வயல்கள் அழிந்தன

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 109 ஹெக்ரேயருக்கு அதிகமான வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன.

மாதம்பே, புத்தளம், ஆனமடுவ, ஆதி ஆகிய பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாதம்பே பிரதேசத்தில் 2 ஆயிரத்து 77 ஹெக்ரேயர், புத்தளம் பிரதேசத்தில் 631 ஹெக்ரேயர், ஆனமடுவ பிரதேசத்தில் ஆயிரத்து 421 ஹெக்ரேயர் வயல் நிலங்களும் அழிவடைந்துள்ளன.

இதன் காரணமாக 16 ஆயிரத்து 438 மெற்றிக் தொன் நெல் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புத்தளத்தில் மரக்கறி, பழங்கள், மிளகாய் மற்றும் கிழங்கு பயிரிடலில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர். (அ-2)



கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கான வெற்றிக் கேடயத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான தடையை நீக்கக் கோரிய வழக்கு

## வைகோவின் ரிட்மனு விசாரணைக்கு ஏற்பு

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கக்கோரும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் ரிட்மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து ம.தி.மு.க. வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி வைகோ தாக்கல் செய்த ரிட் மனு தலைமை நீதிபதி (பொறுப்பு) நீதியரசர் எலிப்பி தர்மாராவ், நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதில் வைகோ கூறியவை வருமாறு,

விடுதலைப்புலிகள்மீதான தடையை நீடித்து மத்திய அரசு 2012 ஆம் ஆண்டு மே 14 இல் பிறப்பித்த ஆணையை மத்திய அரசு நியமித்த டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி வி.கே. ஜெயின் தலைமையிலான தீர்ப்பாயத்திற்கு அனுப்பிவைத்தது.

அந்தத் தீர்ப்பாயத்தில் நான் நேரில் சென்று புலிகள் மீதான தடையை இரத்து செய்யவேண்டும் என்று மனுத்தாக்கல் செய்தேன். தீர்ப்பாயம் நடத்திய விசாரணைகளிலும் பங்கேற்றனர். ஆனால் அந்தத் தீர்ப்பாயத்தில் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலம் உள்ளிட்ட ஆவணங்களின் பிரதிகள் எனக்கு வழங்கப்படவில்லை.

புலிகள் மீதான தடையை உறுதி செய்து தீர்ப்பாயம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி பிறப்பித்த ஆணை நீதிக்கு எதிரானதும் சட்டவிரோத நடவடிக்கைகள் (துடுப்பு) சட்டத்தின் விதிகளுக்கு முரணாகவும் உண்மைக்கு மாறான வாதங்களின் அடிப்படையிலும் தரப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் எதிராகவோ ஆபத்து ஏற்படும் விதமாகவோ செயற்பட்டால்தான் சட்டப்படி குற்றமாகும். விடுதலைப்புலிகள் இயக்கம் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராகச் செயற்படவில்லை.

ஆனால் மத்திய அரசு விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டையும் தமிழ் ஈழத்தில் சேர்க்கத் திட்டமிட்டுள்ளதாக எள்ளளவும் உண்மையில்லாத, முழுக்கமுழுக்க அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மீது சுமத்தி இந்தத் தடையை நீடித்துள்ளது.

தமிழீழம் என்பது இலங்கைத்தீவில் ஈழத் தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு-கிழக்கு பகுதிகளைக் குறிப்பதாகும். இதற்கு ஆதாரமாக 1976 மே 14 ஆம் திகதி வட்டுக் கோட்டையில் தமிழர் அமைப்புக்கள் தந்தை செல்வா தலைமையில் கூடி நிறைவேற்றிய பிரகடனத்தை நான் தீர்ப்பாயத்தில் ஆவணமாக தாக்கல் செய்திருந்தேன்.

ஆனால் தீர்ப்பாய நீதிபதி அந்தப் பிரகடனத்தின் வாசகத்தையே புரிந்து கொள்ளாமல் இந்தியாவிலும் உலகத்திலும் உள்ள தமிழர்கள் தமிழீழத்தின் குடிமக்கள் ஆகலாம் என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழத்தின் பூர்வீகக் குடிமக்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்பவர்கள் குடியுரிமை பெறலாம் என்பதைதான் அப்பிரகடனம் கூறுகிறது. அடிப்படையையே நீதிபதி மாற்றிச் சொல்கிறார். வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு விடுதலைப்புலிகள் அங்கீகரித்ததற்கு ஆதாரம் இல்லை என்று தீர்ப்பாய நீதிபதி கூறுகிறார்.

நீதியரசர் எலிப்பி தர்மாராவ் (வைகோவைப் பார்த்து) விடுதலைப்புலிகள்என்று மூன்றுபேர் இலங்கைக்கு ஆயுதம் கடத்த முயன்றதாக தொடுக்கப்பட்ட வழக்கு குறித்து என்ன கூறுகிறீர்கள்?இதற்கு வைகோ பதிலளிக்கையில்,

கடந்த முறை தடையை எதிர்த்து நான் வழக்கு தொடுத்த போது விடுதலைப் புலிகள் எவரும் இங்கு கைது செய்யப்படவில்லை. வழக்கு ஏதும் இல்லை என்று நான் கூறினேன். அதனால் புலிகள் தடையை நியாயப்படுத்துவதற்காக தமிழ்நாடு கியூ பிரிவு பொலிஸார் பொய் வழக்கு தொடுத்தனர்.

பொலிஸார் பெற்றுள்ள ஒப்புதல் வாக்கு மூலம் நீதிமன்றத்தில் செல்லுபடி ஆகாது. இலங்கையில் இருந்து ஈழத்தமிழர் யார் வந்தாலும் இந்தத் தடையைக் காரணம் காட்டி அவர்களை அச்சுறுத்துவதும் பொய் வழக்கு தொடுப்பதும் சிறப்பு முகாமில் அடைப்பதும் வழக்கமாகிவிட்டது.

எனவே தீர்ப்பாயத்தின் ஆணையை இரத்துச் செய்து புலிகள் மீதான் தடையை நீக்க வேண்டுகின்றேன். ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புலிகள் மீதான தடையை எதிர்த்து நான் தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு தங்கள் முன்னிலையில் விசாரணை நடைபெற்று அதன் மீதான தீர்ப்பையும் எதிர்பார்த்து இருக்கின்றோம் என்றார்.

இதை அடுத்து நீதியரசர் எலிப்பி தர்மாராவ் வைகோவின் ரிட் மனுவை அனுமதித்ததோடு நான்கு வார காலத்திற்குள் அரச தரப்பு பதில் தாக்கல் செய்ய உத்தரவிட்டார் என ம.தி.மு.க. வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான் தடை நீட்டிப்பு குறித்து தீர்ப்பாயம் அளித்த உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தாக்கல் செய்த மனு மீதான விசாரணை முடிவில் இது குறித்த மேல் விசாரணை 4 வார காலம் ஒத்திவைக்கப்படுவதாக சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்தது.

இந்நிலையில் இந்த உத்தரவு சரிதானா என்பது குறித்து பயங்கரவாதிகள் குறித்து ஆராயும் தீர்ப்பாயம் மூன்று இடங்களில் மூன்று கட்ட விசாரணை மேற்கொண்டது. இந்த விசாரணை முடிவில் தடை நீடிப்பு சரிதான் என்று தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில் இந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மறு பரிசீலனை செய்யக் கோரியும். ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த நீதிமன்றம் வைகோ மனு மீதான பதிலை 4 வார காலத்துக்குள் அளிக்க வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டு விசாரணையை 4 வார காலத்துக்கு ஒத்திவைத்தது. (அ-2)

## பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய இராணுவ வீரர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்- ஜகத்

பாதாள உலக குழுக்களுடன் தொடர்புடைய இராணுவ வீரர்களை பதவிநீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அவ் இணையத்தளம் மேலும் குறிப்பிடுகையில்,

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் இராணுவச் சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகள் பற்றிய தகவல்கள் பொலிசாரிடமிருந்து திரட்டப்படும்.

அண்மையில் மிரிஹான பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஒன்பது பேர் அடங்கிய கொள்ளைக் கூட்டத்தில், இரண்டு இராணுவச் சிப்பாய்கள் அங்கம் வகித்தமை தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, போர் இடம்பெற்ற காலத்தில் இராணுவத்திற்கு அதிகளவானோர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். பாதாள உலக குழுக்களைச் சேர்ந்தவர்களும் இராணுவத்தில் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டவர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடி குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)


## பாடசாலை தோட்டம் அமைக்கும் செயற்றிட்டம்


(மல்லாவி)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 39 பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருவதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள ஒட்டுசுட்டான் கல்வி கோட்டத்தின் கீழ் 18 பாடசாலைகளும் மாந்தை கிழக்கு கல்வி கோட்டத்தின் கீழ் 10 பாடசாலைகளும் துணுக்காய் கல்வி கோட்டத்தின் கீழ் 11 பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டு கால் ஏக்கர் நிலப்பரப்பில் பாடசாலை தோட்டம் செய்கை பண்ணப்படுகின்றது. இவ் வேலைத்திட்டத்திற்கு உலக உணவு திட்டத்தினால் 40 மனித வலுவுக்கான உணவுப் பொருட்களுடன் விதை தானியங்களும் பயிர்ச் செய்கை தொடர்பான கையேடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள், தானியங்கள் மாணவர் மதிய உணவு தயாரிப்புக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)





யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க அபிவிருத்தி மன்றின் மூலம் பெற்றோரை இழந்த, பெண் தலைமைத்துவங்களைக் கொண்ட மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 238 மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி சுகுணதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மாணவன் ஒருவருக்கு உதவி தொகை வழங்குவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

354



## சமாதான வாழ்வு

மாமல்லனென்ற வீரனுக்கு சண்டை இடுவதைத் தவிர வேறு எந்தத் தொழிலும் செய்யத் தெரியாது. ஆகவே, நாட்டில் யுத்தம் நடக்கும் வரைதான் அரசர்கள் அவனை வேலைக்கு வைத்துக்கொள்ளமுடிந்தது.

மாமல்லனுக்கு ஒரு சமயம் எங்குமே உத்தியோகம் கிடைக்கவில்லை. அரசர்கள் எல்லோரும் சமாதானத்தையே நாடியதால் எங்கும் யுத்தமே ஏற்படவில்லை. ஆகவே எங்குமே அவனுக்குத் தகுந்த வேலை கிடைக்கவில்லை.

எவ்வளவு நாட்கள்தான் வேலை இல்லாமல் இருப்பது? பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்பதுபோல் அவன் எந்தத் தொழிலையும் செய்யத் தயாரானான்.

அவனுக்குத் தன்னைவிட தன் குதிரையின் கவலையே பெரிய கவலையாக இருந்தது. ஏனென்றால் அதுவும் தின்ன புல் இல்லாமல் மெலிந்து கொண்டேவந்தது. கடைசியில் குதிரையுடன் ஊர் ஊராகச் சுற்றலானான்.

வழியில் ஒரு வயலில் ஒரு குடியானவன் ஏர் பிடித்து எழுது கொண்டிருந்தான். வயலின் ஓரத்தில்

## அம்புலிமாமா கதைகள்

நின்றுகொண்டே அந்தக்குடியானவனைக்கூப்பிட்டான். அவனும் அருகில்வந்து என்ன விசேடம் நீங்கள் யார்? என்று கேட்டான். என்னைத் தெரியவில்லையா? நான் இந்த நாட்டிலேயே பெயர் பெற்ற வீரன். யுத்தத்தில் என்னைப்போல் சண்டையிடுபவர் கிடையாது. ஆனால் இப்போது உத்தியோகம் எங்காவது கிடைக்குமா என்று புறப்பட்டேன். உன் வேலையைச் செய்து கொள்ள என்னையும் வைத்துக்கொள்கிறாயா என்று மிடுக்காக கேட்டான்.

குடியானவனோ நீயோ போர் வீரன். உனக்கு ஏர் பிடித்து உழத் தெரியுமானால் வா. வேலைதருகிறேன் என்றான்.

அந்தக்குடியானவனையும் அவன் ஏரையும் ஏளனமாகப் பார்த்த மாமல்லன் இந்த வேலை செய்வது என் கௌரவத்திற்கு உகந்தது அல்ல! நான் ஒரு மாவீரன்! என் வாள் எப்படிப் பேசுகிறது என்று பார்! என்றபடி வாளைப் பயங்கரமாக சுழற்றிக் காட்டினான். பின்பு உழவனைப் பார்த்து இப்போது புரிந்ததா என் பராக்கிரமம்? வீரனாகிய நான் ஏர் உழுதால் அவமானம்! அதற்குப் பதில் உன் எதிரிகள் யாரென்று சொல்! அவர்



களை விழ்த்தி உன் வ்யலைப் பாதுகாக்கிறேன். அதுபோன்ற வேலை ஏதாவது எனக்குக் கொடு! பின்பு நீ நிம்மதியாக உன் தொழிலை கவனிக்கலாம் என்றான்.

அப்படியானால் நான் உனக்குக் கொடுக்கக்கூடிய வேலை ஒன்றுமே இல்லை என்று சொல்லிவிட்டு அவன் தன் வயலை உழப்போய்விட்டான்.


சுத்தமுட்டாள் பயல். இந்த மாமல்லனின் பிரதாபத்தை அறிந்து கொள்ளாமல் என்னவோ இப்படி உளறுகிறான்? என்று நினைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். சிறிது நேரத்தில் ஒரு பெரிய நகரம் சற்றுத்தூரத்தில் இருப்பதைக் கண்டான். அங்கு ஏதாவது தனக்குத் தகுந்தவேலை கிடைக்குமென்று நினைத்துக்கொண்டே போனான். நகருக்கு முன்னாலேயே ஒரு விஸ்தாரமான மைதானம் இருந்தது. அதில் ஒரு பெரிய சிலை கம்பீரமாக நிறுத்தப்பட்டிருந்தது. அந்தச் சிலையின் கையில் ஒரு கத்தியிருந்தது. இதைப்பார்த்த மாமல்லனுக்கு வெகு சந்தோசம் ஏற்பட்டது. ஆஹா யாரோ பெரிய வீரனின் சிலை போலிருக்கிறதே என்று நினைத்துக்கொண்டே அதனருகே சென்றான். அப்போதுதான் அது யுத்த தேவதையின் சிலை என்று தெரிந்து கொண்டான். சிலை பார்ப்பதற்கு பயங்கரமாக இருந்தாலும் அதிலும் அழகை மாமல்லன் கண்டான். அது ஒரே தங்கமயமாக மின்னிக் கொண்டிருப்பதுபோல அவனுடைய கண்களுக்குப்பட்டது.

ஆஹா! முழுவதும் தங்கத்தால் வார்க்கப்பட்டிருக்கிறதே என்று உரக்கச் சொல்லிக்கொண்டே அதை ஒரு தடவை மேலும் கீழும் பார்த்தான். அதேசமயம் சிலையின் பின்னாளிலிருந்து யாரடா அவன்? குருடனோ? வெள்ளிச்சிலையைப் போய் தங்கச் சிலை என்கிறான் என்று கேட்டுக் கொண்டே வந்தான். மற்றொரு வீரன் யாரடா குருடன்? நான் யார் தெரியுமா? மாமல்லன்... தெரியுமா? என்று மீசை



முறுக்கிக்கொண்டு வந்த வீரனை அலட்சியமாகப் பார்த்தான்.

நான் யார் தெரியுமா? ராஜரத்தினம். என் பெயரைக் கேட்டாலே இந்த நாடே நடுங்கும். தெரியுமா என்றான் மற்றவன். நீ யாராயிருந்தால் எனக்கென்ன? தங்கச்சிலை வெள்ளிச்சிலை என்று வாதிக்கிறாயே? உன்னைக் குருடன் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது என்று கேட்டான் மாமல்லன். வெள்ளிச்சிலையை நீதான் தங்கச்சிலை என்று சொல்கிறாய். நீதான் குருடன் என்றான் ராஜ



ரத்தினம். இவருக்குமிடையே இதே மாதிரி பேச்சுவார்த்தை தடிக்கவே தத்தம் கத்திகளை உருவிக்கொண்டு சண்டையிடத் தயாரானார்கள். இந்தச் சமயத்தில் திடீரென இருவரையும் ஒரு குரல் அதட்டியபடியே இதென்ன வீண் சண்டை! நிறுத்துங்கள் உங்கள் இருவரின் சண்டையை. நீங்கள் இருவருமே முழு முட்டாள்கள் என்றது.

இருவர் இல்லை ஒருவன்தான். தங்கத்தைப்போய் வெள்ளி என்று சொல்கிறான் பொட்டை என்றான் மாமல் லன்.

ஏய்! முட்டாள். வெள்ளியைப் போய் தங்கமென்று நீ வாதிக்கிறாயே. நீதான் வடிகட்டின முட்டாள் என்று சொன்னான் ராஜரத்தினம். அப்போது இரண்டுபேரும் முட்டாள்களே. மறுபடியும் ஒரு தடவை சிலையை நன்றாகப் பாருங்கள் என்று சொல்லிற்று அந்தக்குரல்.

இந்தத் தடவை மாமல்லன் சிலையின் பின்புறம் சென்று பார்த்தான். ராஜரத்தினம் முன்புறமாக நின்று பார்த்தான். என்ன ஆச்சரியம். மாமல்லன் வெள்ளி மயமான சிலையைப் பார்த்துக் கொண்டிருந்தான். ராஜரத்தினமோ தங்கமயமான சிலையைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

இருவரும் திகைத்து நின்றார்கள். இந்தச் சமயத்தில் அங்கு ஒரு தேவதை தோன்றியது. நீங்கள் இருவரும் சொன்னதைப்போல இந்தச்சிலை முன்பக்கம் தங்கமாகவும் பின்புறம் வெள்ளியாகவும் தென்படுகிறது. எவன் தங்கப் பூச்சைப்பார்க்கிறானோ அவன் சிலை முழுவதும் தங்கமென்றே நினைக்கிறான். வெள்ளிப் பூச்சைப் பார்த்தவன் சிலை வெள்ளியால் ஆனது என்று நினைத்து விடுகிறான். அதேபோல நீங்கள் யுத்தத்தையும் சண்டையையும் நினைத்துக் கொண்டே இருக்கிறீர்கள். சமாதான வாழ்வு என்று ஒன்று இருக்கிறது என்பதையும் நீங்கள் நினையுங்கள். இந்தச்சிலை யுத்ததேவதையினுடையது. நான் சமாதான தேவதை என்றது. உடனே இருவரும் தங்கள் வ்ாள்களை விட்டெறிந்துவிட்டு ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டனர். இவ்வளவு நாளாக யுத்தத்தையே நினைத்துக்கொண்டு இருந்தோம். இப்போதுதான் நாங்கள் சமாதான வாழ்வையும் தெரிந்து கொண்டோம் என்று சொன்னார்கள். அன்று முதல் அவர்கள் சமாதான வாழ்வை நாடிச்சென்றனர். நிலத்தை உழுது பாடுபட்டு சுகவாழ்வு வாழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 29 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

பொட்டிக்கடை ராசு பொசுக்குன்னு உள்ள வரவும், பொத்தியிருந்த வேட்டிய விசுக்குன்னு உருவி எறிஞ்சுட்டு வெறிச்சு வெறிச்சுப் பாத்தாரு கருத்தமாயி.

ஊருக்குள்ள ஒரு நல்ல ஆளு பொட்டிக்கடை ராசு. மந்தையில இருந்து நேரா வடக்க போயி நொட்டாங்கையிப் பக்கம் திரும்புனா முட்டுச் சந்துல மூணாம் கடை ராசுகடை. - பொட்டிக்கடைன்னுதான் பேரு.

ஆனா-

காய்கறி, சிகரெட்டு, ரொட்டி, முட்டாயி, கலரு, வெத்தல, உப்பு, புளி, மொளகு, மொளகா, செல்ஃபோன் கார்டு இப்பிடி அட்டணம்பட்டி அனுபவிக்கற சகல பொருளும் கிடைக்கும் ராசுகடையில. ஃபோன் இல்லாத வீட்டுக்கு வெளியூர்க் காரங்க தகவல் சொல்றது அந்தக் கடைக்குத்தான்.

சிலபேரு மூஞ்சிய மட்டும் கழுவிட்டுப் பத்து நாளைக்குக் குளிக்காமலேயே காலந்தள்ளுவான் பாருங்க... அப்படி ஆளு ராசு. சட்டைய மட்டும் அப்பப்ப மாத்திக்கிருவான்; வேட்டிய மாத்தமாட்டான். வெள்ளை வேட்டி காலப் போக்குல மஞ்சளா மாறிக்கிட்டே வரும். இனிமே மஞ்சப் புடிக்க இடமில்லேங்கறபோது மாத்திருவான் வேட்டிய. அன்னைக்குச் சட்டைய மாத்துவான்னு சத்தியமெல்லாம் பண்ண முடியாது. நல்லவன்தான் பாவம். ஆனா- அழுதாலும் சிரிச்சாலும் பெரிய வித்தியாசம் காட்டாத பெறவி. சிரிப்பச் செலவழிக்க வசதி இல்லாத மூஞ்சி.

"என்னப்பா ராசு இந்த நேரத்துல?"

"கல்லூத்துல இருந்து ஒம் மக, பேசுச்சு பெரியப்பா"

"என்னா சொன்னா அழுகுணிச் சிறுக்கி?"

"உங்க சம்பந்தகாரரு வெள்ளச்சாமி இல்ல...?"

ஆமா இருக்காரு?

அவரு இப்ப இல்ல. ஒரு அரை மணி நேரத்துக்கு முன்னாடி அடியாயிட்டாராம். சொல்லுச்சு தேனு."

படக்குன்னு எந்திரிச்சு உக்காந்துட்டாரு கருத்தமாயி. அடிச்ச காய்ச்சல் ஓடிப் போச்சு. கடுங்காப்பியும் மாத்திரையும் நிறுத்தாத காய்ச்சலப் பொட்டுன்னு நிறுத்திட்டுப் போயிருச்சு ஒரு எழவு.

ரொம்ப நேரமா யோசிச்சுத் தொங்கப் போட்ட தலைய அங்கிட்டும் இங்கிட்டும் ஆட்டுனாரு. என்னமோ 'பிராணயாமம்' பண்ற மாதிரி இழுத்து நெஞ்சுல தேக்கின மூச்ச, ஒரு கஞ்சப்பய காசைச் செலவழிக்கிறமாதிரி கொஞ்சம் கொஞ்சமா விட்டாரு. மூஞ்சியில இருந்த கவலையெல்லாம் நெத்திச் சுருக்கத்துப் பள்ளத்துல போயிப் படுத்துக்கிருச்சு பாளம்பாளமா.

அவரு பாவம் கவலப்பட்டது சம்பந் தக்காரரு சாவுக்கு இல்ல. வரவு வராத காலத்துல எழவு வந்திருச்சேன்னு தான் கலங்கிப் போனாரு கருத்தமாயி.

இறுக்கிப் புடிச்சுச் செலவழிச்சாலும் 1200 ரூவா ஆகும். இருந்த பணம் எழுநூறையும் சின்னப்பாண்டி

**கத்தி ஒருத்தனைத்தான் அறுக்கும்; கடன் பரம்பரைய அறுக்கும்**

வாங் கிட்டுப் போயிட்டான். செலவுக்கில்லேன்னு செத்த எழவுக்குப் போகாம இருக்க முடியுமா? யாருக்கிட்டக் கைமாத்துக் கேக்கலாம்?

கட்டில விட்டு எறங்காம விட்டம் பாத்து யோசிக்கிறாரு நெடுநேரமா.

இப்ப எந்தக் காக்காச் சத்தத்தையும் காணோம். தப்பான தகவல் தந்துட்டோம்னு வெக்கப்பட்டுப்போன காக்கா வெளியேறியிருக்கும் ஊரவிட்டே.

சுழியன் சத்தத்தையும் காணோம். பாவத்த இருமலும் கைவிட்டுருச்சு போலருக்கு கடைசியில.


ஒரு கடப்பாரை விழுகுற சத்தம் மட்டும் கேட்டுக்கிட்டேயிருக்கு 'டொங்கு டொங்கு'ன்னு. பின்சுவத்த இடிச்சுக்கிட்டிருக்காங்க முத்துமணி ஆளுக வீட்ட மாத்திக்கட்ட. சுவத்துக்குள்ள போன கடப்பாரை ஊடுருவி நெத்தியிலயும் நெஞ்சிலயும் மாறி மாறி இடிக்கற மாதிரி இருக்கு கருத்தமாயிக்கு.

எந்திரிச்சாரு.

ஒழுகுன மூக்கை வேட்டியில ஒரு ஓரமாத் தொடச்சு அதக் கீழ்ப்பக்கமா வச்சுக் கட்டிக்கிட்டாரு.

குடல் தொங்குன கொடியில பத்தோட பதினொண்ணாக்கிடந்த சட்டைய எடுத்து மாட்டிக்கிட்டுத் துண்டை உதறித் தோள்ல போட்டுக் கிட்டு வெளிய வந்து பாத்தா ஒத்தச் செருப்பக் காணோம். கழுதை இங்கதான் கெடக்கும்; தேடிப்பாத்தாச் சிக்காது. இப்ப இதெல்லாம் பாத்தா முடியுமா? செருப்பத் தேடிக்கிட்டிருந்தா செத்தவரு வருத்தப்படுவாரு.

வெறுங்காலோட வெளியேறிட்டாரு.



•••••

இருக்கிற ஆளுகள்ல கொஞ்சம் ஈரப்பசை உள்ள ஆளு கோவிந்த நாயக்கரு. கேட்டதில்ல இன்ன வரைக்கும்; கேட்டுருவோம்.

வீட்டுக்குப் போனா-

மாவுக்கட்டு போட்டுக் கழுத்துல கயிறு கட்டித் கையத் தொங்கவிட்டுருந்தாரு கோவிந்த நாயக்கரு. அவர் எதுக்க தலையத் தொங்கப் போட்டு உக்காந்திருந்தாரு பொன்னுமுத்துப் பிள்ளை.

கருத்தமாயப் பாத்ததும் 'வாய்யா வாய்யா'ன்னாரு வாய் நெறையா.

"என்னய்யா இது?" பதறிப்போனாரு கருத்தமாயி.

"பசுமாடும் கன்னுக்குட்டியும் பண்ணுன கூத்து. கன்னுக்குட்டியப் புடிச்சுக் கட்டப்போனவன் சாணிய மிதிச்சு விழுந்துபோனேன். அது இருக்கட்டும் கருத்தமாயி- என்னா விசயம் இம்புட்டுத் தூரம்?"

இப்பப் பாதி மனசாகிப் போனாரு கருத்தமாயி. கை ஒடுஞ்சு கிடக்கிற ஆளுகிட்டக் கடன் கேட்டா நல்லவா இருக்கும்?

"ஒண்ணுமில்லய்யா. சும்மா பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்"

இப்ப பொன்னுமுத்துப்பிள்ளை மேல கொதிச்சு விழுந்து குதற ஆரம்பிச்சுட்டாரு கோவிந்த நாயக்கரு.

"பாருய்யா... இந்தாளு மனுசன். பழகுன பழக்கத்துக்குக் கையொடிஞ்ச ஆள விசாரிக்க வந்திருக்காரு. நீயி கையொடிஞ்சவன விசாரிக்கிற மாதிரி கைமாத்துக் கேட்டு வந்திருக்கிற. பழசெல்லாம் கொடுத்துட்டியா? கருத்தமாய எடுத்துக்க. முப்பது நாப்பது வருசத்துப் பழக்கம். ஒரு நாளாச்சும் கடன் கேட்டு வந்திருப்பாரா? கத்தி ஒருத்தனைத்தான் அறுக்கும். கடன் பரம்பரைய அறுக்கும். என்ன கருத்தமாயி நான் சொல்றது?"

நூத்துல ஒரு பேச்சு

இப்ப முழு மனசும் மாறிப்போனாரு கருத்தமாயி.

உக்காந்த மேனிக்கு ஒரு கும்புடு போட்டு எந்திரிச்சுட்டாரு.

•••••

காசி நாடாரை ஊர்ல எல்லாரும் காசு நாடார்னுதான் சொல்றது. இடம் பொருள் ஏவல் பாத்து உண்மைன்னு தெரிஞ்சா உதவி செய்வாரு.

மம்பட்டி வீரன் பேரன சைக்கிள் மிதிக்கச் சொல்லிட்டுப் பின்னால ஒக்காந்து காசிநாடார் கடைக்குப் போறாரு கருத்தமாயி. அவர் பாவம் கடையப் பூட்டிட்டு விரதம்விடப் போயிட்டாரு சதுரகிரிக்கு.

நொந்து வெந்து போனாரு கருத்தமாயி. செத்தவன் மரண யோகத்துல சாக வேணாமா?

இப்படி எமகண்டத்துலயா செத்துத் தொலைக்கிறது?

ஒரு முடிவோட வீட்டுக்கு வந்துட்டாரு.

கட்டிவச்ச அகத்திக் கீரையக் கறுச் கறுச்ன்னு தின்னுக்கிட்டிருந்த வெள்ளாடு இவரைப் பாத்ததுமே மேமே மேமே மே... மேன்னு கத்துச்சு.

"ஒன்னிய நெனச்சுத்தான் வந்திருக்கேன் வாபோவோம்."

கட்டிக் கிடந்த வெள்ளாட்ட அவுத்துக் கையில புடிச்சு நடந்துட்டாரு.

இன்னைக்கு சனிக்கிழமை சந்தை இல்ல;

கசாப்புக் கடைக்குத்தான் போயாகணும்.

கசாப்பு சுப்பு ரொம்ப வினயமான ஆளு. கொஞ்சம் அசந்தாப்போதும்- ஆட்டுக் கொம்ப வெட்டி எலும்புல சேத்து எடை போட்டு விக்கக் கூடிய ஆளுன்னு பேசுவாக ஊருல.

அந்த ஆள விட்டாலும் ஆள் கெடையாது கசாப்புக்கு.

"யப்பா சுப்பு! சம்பந்தி காலமாயிட்டாரு. எழவுக்குப் போகணும். சந்தையுமில்ல. இந்தா இந்த வெள்ளாட்டுக்கு வெல போட்டுக்கொடு."

சந்தை ஆட்டையே சல்லிசா வாங்குற ஆளு வந்த ஆட்டை விடுவானா?

"யண்ணே! கையில காசில்லண்ணே. கடனுக்குக் கறிவாங்கித் தின்னுட்டுக் கொழுப்பெடுத்து அலை யறாங்க ஊருல. வேணும்னா ஒண்ணு பண்றேன். இன்னைக்கு என் ஆட்டை நிறுத்திட்டு உன் ஆட்டை உரிக்கிறேன். விக்கிற கறி உனக்கு; வெட்டுக் கூலி எனக்கு."

ஆட்டுக்கு முன்ன அவன் தன்னக் கழுத்தறுக்கிறான்னு தெரிஞ்சுபோச்சு கருத்தமாயிக்கு.

வேற வழி...?


கருத்தமாயி ஆடும் கசாப்புக் கடைக்காரன் ஆடும் மாறி மாறிப் பாக்குது. கசாப்புக் கடைக்காரனும் அவன் கட்டி வச்சிருந்த ஆடும் பாத்த பார்வையில இருந்த எண்ணம் ஒன்னுதான்.

"இன்னைக்குப் பொழைச்சுக் கிட்டோம்."

கருத்தமாயி பார்வையிலயும் அவர் வீட்டு வெள்ளாடு பாத்த பார்வையிலயும் இருந்த கேள்வி ஒன்னுதான்;

"என்னப் பொழைக்கவிடமாட்டியா?"

(தொடரும்)



சிரிப்பு

நிலவின் கிரணம்
நிலத்தில் விழுந்தால்
சத்தமேது சத்தம்

சிறுசிறு சொர்க்கம் சிரிப்பு
ஜீவ அடையாளம் சிரிப்பு

ஒவ்வொரு சிரிப்பிலும்
ஒரு சில மில்லிமீட்டர்
உயிர் நீளக்கூடும்


மரணத்தைத் தள்ளிப் போடும்
மார்க்கம்தான் சிரிப்பு

எங்கே!
இரண்டுபேர் சந்தித்தால்
தயவு செய்து மரணத்தைத்
தள்ளிப் போடுங்களேன்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரண்டை மற்றும் கற்றாழையின் மருத்துவக் குணங்கள்

## பிரண்டை



பிரண்டை வேலிகளில் படர்ந்திருக்கும். வீட்டில் மண் தொட்டியை வைத்தும் பிரண்டை வளர்க்கலாம். இதனுடைய தண்டுப் பகுதி நான்கு பட்டைகளுடன் சதைப்பற்று நிறைந்திருக்கும். இதனுடைய இலைகள் தடித்து நீர் மிகுந்திருக்கும்.

பிரண்டைகளில் ஓலைப் பிரண்டை, உருட்டுப் பிரண்டை, முப்பிரண்டை, களிப் பிரண்டை, புளிப்பிரண்டை எனப் பல பிரிவுகள் உண்டு. முப்பிரண்டை கிடைப்பது அரிது.

பிரண்டைக் கொடிக்கு வச்சிர வல்லி, சஞ்சீவி, உத்தண என்கிற பெயர்களும் உண்டு. பிரண்டை நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது. ஆண்மையை பெருக்குகிறது. பசியைத் தூண்டி விடுவதில் முதலிடம் பெறுகிறது. நம் உடம்பை தேற்றுவதில் சிறந்து விளங்குகிறது.

பிரண்டைத் துவையலை சாப்பிட்டு இருக்கிறீர்களா?

மிகுந்த ருசியுள்ளது. இதை சாப்பிட்டால் பசி உண்டாகும். செரிமாணக் கோளாறு இருப்பின் அதனை போக்கி விடும். மலச் சிக்கலை நீக்கி விடும். குடலில் புழுக்கள் இருந்தால் அதனைக் கொன்று விடும். உடலுக்கு பலத்தைக் கொடுக்கும்.


பிரண்டையால் செய்யப்பட்ட வடகத்தை சாப்பிட்டு வந்தால் கத நோய்கள் நீங்கும். செரியாமைக் கோளாறு அகலும். களிப்பிரண்டையை கணு நீக்கி மிளகு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து உணவாகப் புசித்து வந்தால் பிணியினால் நொந்து மெலிந்த உடல் வன்மை பெறும்.

பிரண்டையுடன் சிறிது மிளகைக் கூட்டி அரைத்து சுண்டக்காய் அளவு தினந்தோறும் இரண்டு வேளை சாப்பிட ஆஸ்துமா தொந்தரவு குறையும். வேக வைத்த பிரண்டையை உப்பிட்ட மோரில் போட்டு உலர்த்தி வற்றலாகச் செய்வார்கள். பிரண்டையை நெய்யிட்டு அரைத்து கொட்டைப் பாக்கு அளவு தினமும் காலை, மாலை என்று இரு வேளையும் எட்டு நாட்கள் சாப்பிட மலக்குடல் அரிப்பு, இரத்த மூலம் ஆகியவை குணமாகும்.

பிரண்டைத் தண்டுகளை சிறிய அளவில் நறுக்கி இரசத்தில் சேர்த்து கொதிக்க வைத்து ஒரு டம்ளர் குடித்தால் எலும்புகள் பலம் பெறும். முறிந்த எலும்பு விரைவில் கூடும். ஒரு மாதம் பிரண்டை இரசம் குடிக்க வேண்டும். பிரண்டையை இடித்து சாறு பிழிந்து கொள்ளுங்கள். இத்துடன் புளி, உப்பு சேர்த்துக் காய்ச்சுங்கள். குழம்புப் பதத்தில் கெட்டியானதும் அடுப்பிலிருந்து இறக்கி சூடு தாங்குமளவுக்கு பற்றுப் போட வேண்டும். இப்படிச் செய்தால் சுளுக்கு, சதை பிரள்தல், எலும்பு முறிவினால் ஏற்பட்ட வீக்கம் ஆகியவை குணமாகும்.

பிரண்டை உப்பு பல நோய்களைப் போக்கும் வல்லமை கொண்டது. பிரண்டையில் புரதம், கொழுப்பு, நார்ப்பொருள், மாவுப் பொருள், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு ஆகிய சத்துக்கள் உள்ளன. பிரண்டை ஆண்மைச் சக்தியைப் பெருக்கும். இந்த பிரண்டை உங்கள் உயிர் காக்கும் நண்பன் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## கற்றாழை



சோற்றுக்கற்றாழை ஒரு சர்வரோக நிவாரணி. வீட்டிலேயே எளிதாகப் படர்ந்து வளரக் கூடிய அருமருந்து.

சோற்றுக்கற்றாழையில் உள்ள முள்ளை சீவி விட்டு உள்ளே உள்ள சதையினை எடுத்து நீரில் கழுவிய பின் அப்படியே சாப்பிட்டு வந்தால் 30 நாட்களிலேயே உடல் அழகாக மினுமினுப்புடன் மிளிரும்.

கை, கால் இடுக்குப் பகுதிகளில் மருந்து பட்டுப்படாத அரிப்பு பாடாய் படுத்தும். அவர்கள் இந்த கற்றாழையின் சதையைத் தொடர்ந்து 3 நாட்கள் பூசி வர அரிப்பு ஓடியே போய் விடும்.

குழந்தை பெற்றெடுத்த பின்பு சில பெண்கள் வயிற்றில் கோடுகள், தழும்புகளுடன் தவிப்பார்கள். அவர்கள் சோற்றுக் கற்றாழையின் சதைப்பகுதியை வயிற்றின் மேல் தடவி வந்தால் வயிற்றில் உள்ள கோடுகள், தழும்புகள் குறைந்து விடும்.

குழந்தையைப் பெற்ற தாய்மார்கள் கற்றாழையை வாரம் ஒருமுறை சாப்பிட்டு வந்தால் வயிற்றில் உள்ள தேவையில்லாத அசடுகள், கசடுகள் வெளியேறி உடல் நலமுடன் இருக்கலாம். சிலருக்கு எத்தனை முறை பல் துலக்கி பற்களை சுத்தமாக வைத்திருந்தாலும் வாயில் துர்நாற்றம் அடித்துக் கொண்டே இருக்கும். இதைப் போக்க காலை எழுந்து வெறும் வயிற்றில் கற்றாழை சதையை சாப்பிட்டு வர வாய் மணக்கும், வயிறும் சுத்தமாகும்.

பெண்களுக்கே உண்டான மாதவிடாய் வலிகள் எந்த வலியாய் இருந்தாலும் சோற்றுக் கற்றாழையை தொடர்ந்து பத்து நாட்கள் சாப்பிட்டு வர உடல் குளிர்ச்சி அடைந்து வந்த வலிகள் வழி தெரியாமல் ஓடிவிடும்.

கற்றாழை, வேப்பிலை இரண்டையும் சம அளவு எடுத்து மென்று சாப்பிட்டு வந்தால் ஜீரண மண்டலம் பலமடையும். பசியும் நன்றாக எடுக்கும். சிலருக்கு உடலிலே எப்போதும் வியர்வை நாற்றம் இருந்து கொண்டே இருக்கும். இதற்கு ஸ்பூன் கற்றாளைச் சாற்றுடன் ஒரு ஸ்பூன் மஞ்சள் பொடி கலந்து தினமும் குளித்து வர ஒரு மாதத்தில் நல்ல குணம் தெரியும். தொடர்ந்து குளித்தல் முக்கியமானது.




# இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு

## பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு ஏற்பாடு

இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இரு நாட்டு மீனவ அமைப்புக்களின் அதிகார பூர்வ பேச்சுவார்த்தைக்கு இந்திய மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நடவடிக்கைக்கு தமிழக அரசு ஒத்துழைக்க வேண்டும் என இந்திய பிரதமர் அலுவலக விவகாரங்களுக்கான இணைய மைச்சர் வி.நாராயணசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்,

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி வரும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்திய, இலங்கை மீனவர்கள் எந்தப் பகுதிகளில் மீன்பிடிக்கலாம் என்பது குறித்து எல்லையை நிர்ணயம் செய்ய இரு நாட்டு மீனவ அமைப்புகளும் அதிகாரபூர்வமாக சந்தித்துப் பேச மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னரும் இரு நாட்டு மீனவ அமைப்பினர் ஒரு சிலமுறை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ஆனால், அது அதிகாரபூர்வமற்ற முறையில் நடைபெற்றது. தற்போது இருநாட்டு மீனவ அமைப்புகளின் பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பாக கடந்த சில தினங்களுக்கு முன்பு புதுடில்லிக்கு விஜயம் செய்த இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் பேசியுள்ளார்.

தமிழக அரசு ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே இரு நாட்டு மீனவ அமைப்புக்களின் பேச்சுவார்த்தையை நடத்தி ஒப்பந்தம் செய்ய முடியும். தமிழக அரசின் அனுமதி இருந்தால் தான் தமிழக மீனவ அமைப்புக்கள், இலங்கை மீனவ அமைப்புக்களோடு பேச முடியும்.

இது தொடர்பாக தமிழக தலைமைச் செயலாளருக்கு இந்திய மத்திய வெளிவிவகார செயலாளர் கடிதம் எழுதியுள்ளார் என்று கூறியுள்ளார். (அ-2)

# நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றது

## ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத்

(கொழும்பு)

நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றது என ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா தெரிவித்துள்ளார். இந்த அரசாங்கத்திற்கு உண்மையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சில சலுகைகளை வழங்கியே அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொண்டது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டின் அரசியல் சாசனத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறான மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்பது பற்றி தமக்கு தெரியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் அது அரசாங்கத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கில் செய்யப்படுகின்றது என்பது உறுதி என சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (அ-2)

# மாணவியின் கை அகற்றப்பட்ட விவகாரம்; உடன் விசாரணைக்கு அரசு உத்தரவு

(கொழும்பு)

மாத்தறையைச் சேர்ந்த கொழும்பு பல்கலைக்கழக மாணவியின் இடது கை சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ள சர்ச்சை தொடர்பாக உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க, பிரதிப்பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஆனந்த குணசேகர மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர்களை உள்ளடக்கிய விசேடவிசாரணைக் குழுவொன்றை நேற்று முன்தினம் நியமித்தார்.

இதேவேளை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இம்மாணவியை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை பணிப்பெண் சார்ஜாவில் கைது

இலங்கைப் பணிப்பெண் ஒருவர் சார்ஜாவில் கைது செய்யப்பட்டுள்ளார். தங்க நகைகளைக் களவாடி நாட்டுக்கு தப்பிச் செல்ல முற்பட்ட போது குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். 82 ஆயிரம் தினார் பெறுமதியுடைய தங்க ஆபரணங்களை களவாடிய குறித்த பெண் இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தப்பிச் செல்ல முற்பட்ட இலங்கைப் பெண்ணை சார்ஜா விமான நிலைய பொலிஸார் கைது செய்துள்ளனர். பால்மா கொள்கலன்களில் குறித்த நகைகளை மறைத்து எடுத்துச் செல்ல முயற்சித்து உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் மேலும் இரண்டு இலங்கைப் பணிப்பெண்களுக்கும் தொடர்பு இருப்பதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. (அ-2)

# பிரி. வெளிவிவகார செயலாளர் வருகை

பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் எலிஸ்டயார் பேர்ட் விசேட உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்த வாரம் இலங்கை பயணிக்கவுள்ளார். இலங்கை வரும் அவர் அங்கு நடைபெறும் கருத்தரங்குகள் சிலவற்றில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இதனை தவிர இலங்கை அரசின் உயர் அதிகாரிகள், உயர் மட்டப் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தூதரகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளை மீறுவோர்மீது தீவிர நடவடிக்கை எடுப்போம்

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களம் மனித உரிமையை பாதுகாப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது. மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோரை தண்டிப்பதற்காக நாம் பொலிஸாரின் அனுசரணையுடன் தீவிர நடவடிக்கைகளை எடுப்போம் என்று சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

மனித அடிப்படை உரிமைகளை பேணிப் பாதுகாக்கும் அமைப்புக்களை வலுவூட்டி அவற்றுக்கு எவ்வித அச்சுறுத்தலோ ஆபத்தோ ஏற்படாத வகையில் தமது திணைக்களம் அவ்வமைப்புக்கு பூரண பாதுகாப்பையும் வழங்க இருக்கின்றதென்றும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை கொடுப்பதற்காக தமது திணைக்களம் இப்போது சட்டத்திலும் திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறதென்று அவர் மேலும் அறிவித்தார்.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகமயப்படுத்தல் பற்றிய ஆசிய பசுபிக் முதுமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தில் பிரதான உரையாற்றிய பாலித பெர்னாண்டோ ஒவ்வொரு நாடும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் மனித உரிமைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க தவறக்கூடாது என்றும் கூறினார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நிர்வாக அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்டாலும் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு அத்தகைய மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் தயங்குவதில்லை என்றும் அவர் கூறினார்.

1946 ஆம் ஆண்டில் இலங்கையில் அரசியல் சாசனம் நிறைவேற்றப்பட்ட போது அதில் ஒரு பிரிவில் மத ரீதியிலான சிறுபான்மையானோருக்கு எதிராக பாகுபாடு காட்டக்கூடாது என்று கருத்து எழுதப்பட்டுள்ளது.

அதுபோன்றே 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் சாசனத்திலும் மனித உரிமைகளை பேணிப்பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட அரசியல் சாசனத்தில் எவருடைய மனித உரிமை யாவது மீறப்பட்டிருந்தால் அது குறித்து அவர் உச்ச நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் பெற முடியுமென்ற பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் றொபின் மூடி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஷெனிக்கா ஹிரிபுரேகம ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (அ-2)

## விமானத்தின் மூலம் பக்றீரியா விசிறல்

(கொழும்பு)

பீ.ரி.ஐ.பக்றீரியாவை விமானத்தின் மூலம் விசிறுவதற்கான அனுமதியை கோரி அமைச்சரவையில் மனுவொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய குறித்த மனு எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பரவும் பகுதிகளுக்கு விமானத்தின் மூலம் பீ.ரீ.ஐ. பக்றீரியாவை விசிறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்குத் தேவையான பீ.ரி.ஐ. பக்றீரியா கியூபாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் கூறினார். (அ-2)

## 13 ஆவது திருத்தம் குறித்து இந்திய அதிகாரிகள் கேள்வியெழுப்பவில்லை

### வெளிவிவகார செயலாளர் கருணாரட்ன

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பாக இந்திய அரச அதிகாரிகள் எவருமே கேள்வி எழுப்பவில்லை என்று இலங்கை வெளிவிவகாரச் செய்லர் கருணாரட்ன அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்திய -இலங்கை கூட்டுக் குழுக் கூட்டத்துக்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசுடன் கடந்தவாரம் செயலர் கருணாரட்ன அமுனுகம புதுடில்லி சென்றிருந்தார்.

புதுடில்லியில் இருந்து கொழும்பு திரும்பிய அவரிடம் 13 ஆவது திருத்தம் குறித்து இந்தியா கரிசனை செலுத்தியதா என்று கேள்வி எழுப்பியதற்குப் பதிலளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக இந்திய அதிகாரிகள் எவரும் கேள்வி எழுப்பவில்லை. ஆனால் இந்திய ஊடகங்கள் அதில் அக்கறை செலுத்தின. கூட்டுக்குழுக் கூட்டத்தை அடுத்து நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விளக்கமளித்திருந்தார்.

13 ஆவது திருத்தம் இலங்கையில் ஏற்கனவே ஒரு சட்டமாக உள்ளது. அங்கு ஆட்சியில் இருப்பது ஒரு கூட்டணி அரசாங்கம்.

இந்தத் திருத்தம் தொடர்பாக வெவ்வேறு அரசியல் கட்சிகளும் அங்கு பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்துவார்கள் என்று அவர் விளக்கமளித்திருந்தார் என்றும் கருணாரட்ன அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## மதக் குரோத செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம்-ஜனாதிபதி

மதக் குரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வன்முறைகளை தூண்டும் வண்ணம் செயற்பட வேண்டாம் என பொதுபலசேனா அமைப்பிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறுபான்மை முஸ்லிம் மதத் தலைவர்களை இலக்கு வைத்து வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு குறித்த அமைப்பிடம் ஜனாதிபதி கோரியுள்ளார்.

பௌத்த மதத்தை வலுப்படுத்துவதில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அது ஏனைய மதங்களுடன் முரண்டுபாட்டை ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமது பெயரைப் பயன்படுத்தி சில அமைப்புக்கள் மதக் குரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக பொது பல சேனா அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

## புலிச் சந்தேக நபர்கள் மகசீன் சிறைக்கு மாற்றம்

(கொழும்பு)

புலிச் சந்தேக நபர்கள் 80 பேர் மகசீன் சிறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேகநபர்களே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் போதியளவு இடவசதி காணப்படாத காரணத்தினால் இவ்வாறு சந்தேகநபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களின் எண்ணிக்கை 106 என சிறைச்சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## அரசியல் தீர்வு தொடர்பால் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

### வாழ்வுரிமை கட்சி நிறுவுநர்

ஈழத் தமிழர்களிடத்தில் அரசியல் தீர்வு குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவுநர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.


விழுப்புரத்தில் இடம்பெற்ற அக்கட்சியின் 2 ஆம்ஆண்டு தொடக்க விழாவில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிக்கையில்,

ஈழத்திலுள்ள தமிழர்களிடம் அவர்களது விருப்பம் குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

குறைந்த பட்சம் அதற்காகவாவது நாம் போராட வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் மத்திய அரசு தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வருகிறது.

காவிரிநதி நீர் விவகாரம், முல்லைப் பெரியாறு, பாலாறு பிரச்சினைகளில் சாதி, மத எல்லைகளைக் கடந்து தமிழர்களாய் ஓரணியில் திரள்வோம்.

வன்னியர் சங்கத்தை காப்பாற்ற போவதாக கூறும் ராமராசுக்கு எந்த கொள்கையும் கிடையாது. தர்மபுரியில் இரு சமுதாய மக்களையும் மோதவிட்டு அரசியல் இலாபமடையப் பார்க்கிறார் என்றார். (அ-5)




யாழ்/மத்திய கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியினை முன்னிட்டு அண்மையில் மரதன் ஓட்ட நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களையும் முதலாமிடத்தினை பெற்ற தினேஸ்குமாரிற்கு ரில்கோ ஹோட்டல் உரிமையாளர் தியாராஜா கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மல்லாகச் செய்தியாளர்)

## மெய்வல்லுநர்போட்டி

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

வித்தியாலய அதிபர் ச. பூலோகராஜா தலைமையில் நடைபெறவுள்ள் இப்போட்டியில் பிரதம விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன் கலந்து கொள்கிறார். (அ-5-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்போ யுத்தபூமி இப்போ சுற்றுலாபூமி

**த சண்டே றைம்ஸ் ஒஃவ் இன்டியா இற்கு ஃபிரான்ஸிஸ் ஹரிசன் வழங்கியதிலிருந்து...**

2009 இல் 40 ஆயிரம் வரையான மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ள இலங்கையில் யுத்த களங்களின் மேற்பரப்புகளில் மனித எலும்புக்கூடுகள் மற்றும் மண்டையோடுகள் என்பன காணப்படுவதாகவும் இந்த இடங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாகவே இவை இவ்வாறு வெளித்தெரிவதாக இங்கு பணயம் செய்துள்ள உள்நாட்டு. மக்கள் தெரிவித்துள்ளனர்.

'இது ஒரு பயங்கர காட்சியாகும்' என அண்மையில் இலங்கையின் கொலை வலயங்களுக்கு சுற்றுலா சென்றிருந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு பெண்களின் சேலைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளின் எச்சங்கள் மற்றும் புதர்களின் கீழ் கைப்பெட்டிகள் மற்றும் சிறார்களின் உடைகள்போன்றன காணப்படுவதாகவும் குறித்த அந்த நபர் தெரிவித்தார்.

"முன்னாள் யுத்தவலயங்களில் வாழ்ந்த மக்கள் இவ்வளவு ஒடுங்கிய மிசச்சிறிய பகுதியில் எவ்வாறு ஒன்றாக வாழ்ந்திருப்பார்கள் என்பதை எவரும் கற்பனை செய்து பார்க்க முடியாது" என இலங்கையின் யுத்தகளங்களுக்கு அண்மையில் பயணம் செய்திருந்த இந்த நபர் மேலும் தெரிவித்தார்.

இந்த வலையங்களில் மனிதர்கள் விட்டுச்சென்ற எச்சங்களை அருகில் சென்று பார்ப்பதற்கு அல்லது அவற்றை எடுப்பதற்கு தான் அச்சமுற்றதாகவும் அங்கே நிலக்கண்ணிவெடிகள் போன்ற வெடிக்காத பொருட்கள் காணப்படலாம் என்ற அச்சமே காரணம் எனவும் இந்த சுற்றுலாப் பயணிமேலும் தெரிவித்தார்.


2009இல் விடுதலைப்புலிகள் தமது இறுதித் தளத்தை முள்ளி வாய்க்கால் என்ற கிராமத்தில் அமைத்திருந்தனர். இந்தக்கிராமத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் 1இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களும் அகப்பட்டனர். 2009 இன் முதல் சில மாதங்களில் முள்ளிவாய்க் கால் என்கின்ற சிறிய கிராமத்தில் இடம்பெற்ற யுத்தமும் அதன்போது மக்கள் அனுபவித்த துன்பங்களும் கனதியானவை.

முள்ளிவாய்காலில் இடம்பெற்ற இறுதி யுத்தமானது, இலங்கையின் சிறேபிறெனிக்கா (the srebrenica of srilanka) எனக் கூறப்படுகிறது. முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட யுத்தம் அரங்கேற்றப்பட்டபோது மனிதாபிமானத்திற்கு எதிரானகுற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் என்பன இழைக்கப்பட்டதாக ஐ.நா. வல்லுனர் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டுப்போர் உக்கிரமடைந்திருந்த காலப்பகுதியான 2009இன் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் சில மக்கள் 40 தடவைகள் வரை இடம்பெயர்ந்து இறுதியில் சதுப்பு நிலப்பகுதியான முள்ளிவாய்க்காலை அடைந்திருந்தனர். இந்த மக்கள் ஒவ்வொரு தடவையும் இடம்பெயரும் போதும் தாம் இறந்துவிடுவோம் என்ற எதிர்பார்ப்புடனேயே வாழ்ந்தனர்.

"யுத்தம் இடம்பெற்ற ஓரிரவில் மட்டும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். 4 அயிரம் பேர் வரையில் காயமடைந்தனர். மக்கள் வாழ்ந்த யுத்தவலயமற்ற பகுதிகளில் ஆட்லறி, மோட்டார் மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்கள், கொத்துக் குண்டுகள் போன்றன வீசப்பட்டன" என கொடிய யுத்தத்தில் அகப்பட்ட கத்தோலிக்க மதகுரு ஒருவர் போப் பாண்டவருக்கு எழுதிய மடலில் தெரிவித்திருந்தார்.

"சிறார் மற்றும் குழந்தைகள் கதறுகின்றனர், பெண்களும் வயது முதிர்ந்தவர்களும் நக்சுவாயுக்களால் துன்பப்படுகினறனர். தந்தையர்கள், அன்னையர்கள் மற்றும் எல்லாத்தரப்பினரும் தமது உயிருக்காக போராடுகின்றனர்" என இந்த மதகுரு போப்பாண்டவருக்கு எழுதிய அறிக்கையல் தெரிவித்திருந்தார். ஆனால், இதனை எழுதிய கத்தோலிக்க பாதிரியார்







## வெள்ளம் கழுவி... வெளித்தெரியுது வீழ்த்தப்பட்டவரின் உயிர்க்கூடுகள்!

யுத்தத்தின் இறுதியில் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்ததை பலர் நேரில் பார்த்தபோதிலும் இதுவரை இவர் தொடர்பான தகவல்கள் வெளிவரவில்லை.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக முள்ளிவாய்க்கால் பிரதேசமானது இலங்கை இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகிறது. தற்போதும்கூட முள்ளிவாய்க்காலில் பெருமளவிலான இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதான வீதியில் பயணிப்பவர்களை நிறுத்தி அச்சுறுத்துவதாகவும் உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர்.

இங்கு வாழும் உள்ளூர் மக்கள் வெளியாட்களிடம் அரசியல் விடயங்களை கதைப்பதற்கு அச்சப்படுவதாக இங்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் கூறுகின்றனர். கணவனை இழந்த பெண்கள் பாலியல் மிறல்களுக்கு உட்படுவதாகவும் இந்தப் பெண்கள் கிராமங்களில் வாழ்வதுடன் இவர்களை இலங்கை பாதுகாப்பு படைவீரர்கள் விசாரணை என்ற பெயரில் தொல்லைக்கு உட்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

யுத்தம் முடிந்தபின்னர் தற்போது யுத்த வலயமானது போரில் உயிர் தப்பிய ஏனைய மக்கள் மீள்குடியேறுவதற்காக பகுதியளவில் திறக்கப்பட்டுள்ளது. அத்துடன் தாம் எவ்வாறு எதிரிகளைத் தோற்கடித்தோம் என்பதனை பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு காண்பிப்பதற்காக இலங்கையின் கொலை வலயங்களை இலங்கை இராணுவத்தினர் தற்போது சுற்றுலா மையமாக மாற்றி வருகின்றனர்.

பல பத்தாண்டுகளாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த இலங்கையின் வடபகுதிக்கு தென்னிலங்கையர்கள் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது யுத்தம் முடிந்தபின்னர் பெரும்பாலான சிங்கள மக்கள் வடபகுதிக்கு சுற்றுலா மேற்கொள்கின்றனர்.

பேருந்துகளில் வடபகுதிக்குச் செல்லும் சிங்கள மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் வீடு, இவரது நிலக்கீழ் பதுங்குகுழி, நீச்சல் தடாகம் மற்றும் சூட்டுப்பயிற்சி மைதானம் போன்றவற்றைப் பார்வையிடுகின்றனர். இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் பயங்கரவாதிகளின் நீச்சல் தடாகம் போன்ற தலைப்புகள் இடப்பட்டுள்ளன.

இதைவிட விடுதலைப்புலிகளின் தலைநகராக விளங்கிய கிளிநொச்சியில் வீழ்ந்துகிடக்கும் நீர்த்தாங்கியின் அருகில் நினைவுச் சின்னங்களை விற்கும் கடை ஒன்று காணப்படுகின்றது. இவற்றுக்கு அடுத்ததாக இலங்கை இராணவத்தால் நடத்தப்படும் தேநீர்ச்சாலை ஒன்றும் அமைந்துள்ளது.

ஆனால், இலங்கையின் வரலாற்றில் போரின்போது பல பத்தாயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக எந்தவொரு பதிவும் ஒருவார்த்தை கூடக் காணப்படவில்லை. அத்துடன் யுத்த வலயத்தில் வாழ்ந்த மக்கள், வைத்திய சாலைகள், உணவுக்காக வரிசையில் நின்ற மக்கள் என எந்தவொரு பாகுபாடுமின்றி இலங்கை இராணுவத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான பதிவுகளும் காணப்படவில்லை. 2009 யுத்தத்தின்போது பெரும்பாலான தமிழ்க்குடும்பங்கள் தமது உறவுகளை இழந்திருந்தனர்.

"விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சிறுவயதில் வாழ்ந்த வீடு மற்றும் விடுதலைப்புலிகளின் கல்லறைகள் போன்றவற்றை இலங்கை அரசாங்கம் அழித்தபோதிலும் விடுதலைப் புலிகளின் நிலக்கீழ் பதுங்கு குழி மற்றும் நிர்மாணிக்கப்பட்ட போர்க் கால அருங்காட்சியகம் போன்றவற்றை மட்டும் அழிக்காதிருப்பதற்கான காரணம் என்ன? இந்த விடயத்தில் என்ன வகையான விவாதம் மேற்கொள்ளப்படுகிறது? என கனடாவின் ரொரான்ரோ ஜோர்ஜ் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் அமர்நாத் அமரசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இவ்வகையான போர்ச் சுற்றுலாத் திட்டமானது இலங்கையில் வாழும் இரு சமூகத்தவர்களுக்கும் இடையில் மீளிணக்கப்பாட்டையோ அல்லது உள்ளூர் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தையோ ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாகும். யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் யுத்தவலயத்தில் வாழும் உள்ளூர் மக்களின் வாழ்வியலுக்கும் இந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆடம்பர சுற்றுலாப் பயணவிடுதிகளுக்கும் இடையில் பெருமளவான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

யுத்தவலயத்தில் காணப்படும் பனைமரங்களின் மேற்பகுதிகள் எரிந்து காணப்படுவதானது யுத்தத்தின் தாக்கத்தை சுட்டிக்காட்டுகின்றன. பெருமளவான கட்டடங்கள் போரின் போது அழிக்கப்பட்டுள்ளன. வீதியோரங்களில் காணப்படும் வீடுகள் அல்லது குடிசைகள் கூரைகளற்று காணப்படுதாக சுற்றுலாப் பயணிகள் கூறுகின்றனர். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் தமது வீடுகளைக் கட்டுவதற்கு அல்லது மீளத்திருத்துவதற்காக வெளிநாடுகளில் வாழும் தமது உறவுகளிடம் அல்லது வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரகுமாரன் செயற்படுவது பிரச்சினையான விடயம்

## ஜனாதிபதி தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

அமெரிக்காவில் இருந்து விடுதலைப் புலிகளின் நடவடிக்கையாளர் உருத்திரகுமாரன் செயற்பட்டுக் கொண்டிருப்பது பிரச்சினையான விடயம் என்று ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ முறை யிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு அமெரிக்கா தூதுவராக பற்றிசீயா புட்டினீஸ் பதவியேற்ற பின்னர் அவருடன் இடம்பெற்ற தனிப்பட்ட சந்திப்பின்போது மஹிந்த ராஜபக்ஷ இந்த முறைப்பாட்டை தெரிவித்தா க அமெரிக்க தூதரகம் வோஷிங்டனுக்கு அறிவித்திருந்தது.

இந்த தகவல் விக்கிலீக்ஸில் இருந்து கசிந்துள்ளது. இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் சர்வதேசத்தில் விடுதலைப் புலிகளின் வலையமைப்பு செயற்பட்டு வருகிறது.

நிதிச் சேகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் அது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை.

எனினும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையாளர் உருத்திரகுமாரன் மற்றும் தமிழ் புலம்பெயர்வாளர்கள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும் இன்னும்பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவில்லை என்றே கருதுவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் 2004 ஆம் ஆண்டு சுனாமிக்கு பின்னர் இலங்கைக்கு 3 ஆயிரம் அரச சார்பற்ற நிறுவனங்கள் வந்தபோதும் அவற்றில் பெரும்பாலானவை விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தினார்.

இதன்போது கருத்துரைத்த அமெரிக்க முன்னாள் தூதர் புட்டினீஸ் இடம்பெயர்ந்தோர் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பது இலங்கை - அமெரிக்க உறவை பாதிக்கும் என்று குறிப்பிட்டதாக விக்கிலீஸ் தகவல் தெரிவிக்கிறது. (அ-2)

# 13 ஆவது திருத்தம் இரத்தாக்கப்பட்டால் சபை உறுப்பினர்கள் பதவி விலகுவர்

## ஜாதிகஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தயார் என்றால் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் பதவி விலகத் தயார் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

முன்னுதாரணமாக மாகாண சபைகளில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் மற்றும் அமைச்சுப் பதவியிலிருந்து விலகிக் கொள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சி தயார் என கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த ஸ்ரீ வர்ண சிங்க தெரிவித்துள்ளார். காலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்படுவதனை சில அரசியல்வாதிகள் விரும்பவில்லை. தங்களது மனைவி, பிள்ளைகள், சகோதரர் கள் உள்ளிட்ட உறவினர்களுக்கு அரசியல் பாடம் படிக்கக் கூடிய பாலர் பாடசாலையாக மாகாண சபையை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

எனவே மாகாண சபை முறைமை ஒழிக்கப்படுவதனை சில அரசியல்வாதிகள் விரும்பவில்லை.

எனினும் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அரசாங்கம் இரத்துச் செய்யுமாயின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உறுப்பினர்களை வாபஸ் பெற்றுக் கொள்ளத் தயார். 13 ஆம் திருத்தச் சட்டம் என்ற பாரிய சதி வலையிலிருந்து தப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் மனதைக் காயப்படுத்தாது தந்திரமாக இந்த சதியிலிருந்து தப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசை வீட்டுக்கு அனுப்புவதில் எதிர்க்கட்சியினருக்கு ஆர்வம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை முன் கொண்டு செல்வதற்கும் தற்போதைய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கும் தமது கட்சி உறுப்பினர்களின் குரல்கள் முக்கிய உந்துதலாக இருப் பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை கௌரவித்தல் மற்றும் பிரதிநிதிகளுக்கு அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த கருத்தை வெளியிட் டார்.

அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவதற்கு வழியை தேட வேண்டும். அதனை செயற்படுத்துவதற்கு பலம் வாய்ந்த கூட்டணியொன்றும் அரசியல் இராணுவம் ஒன்றும் அடித்தளத்திலிருந்து உருவாக வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என பிரதான இரண்டு கட்சிகள் இருக்கின்றன. இவற்றின் மீதே அனைவரும் கவனத்தை திருப்புகிறார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (அ-2)

# பௌத்தசாசன அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்

## இராஜதுரை எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

பௌத்த சாசன அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் இராஜதுரை கோரிக்கை விடுத்துள்ளார்.

இந் நாட்டின் ஏனைய அனைத்து மதங்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் பௌத்த சாசன அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

பல்லின மக்கள் வாழ்ந்து வரும் இலங்கையில் ஒரு இன சமூகத்தின் மதத்தின் பெயரில் மட்டும் அமைச்சு உருவாக்கப்படுவது நியாயமற்றது.

எனவே நாட்டின் சகல மதங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பௌத்த சாசன அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

மதவிவகாரங்களுக்கான அமைச்சின் பெயர் பொதுவாக அமைவதனால் அனைத்து மத மக்களுக்கும் சம சந்தர்ப்பங்கள் கிட்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# யார் என்ன சொன்னாலும் தேசிய கீதம் மாற்றப்படாது

## அடித்துக் கூறுகிறது அரசு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கீதத்தில் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய கீதத்தில் தமிழ்மொழியையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு தொடர்பில் சில பெரும்பான்மைக் கட்சிகள் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்த நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும் சுதந்திர தின நிகழ்வுகளில் இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தேசிய கீதத்தில் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேசிய கீதத்தில் மாற்றங்களை செய்வதன் மூலம் என்ன பயன் கிடைக்கும்?

யார் என்ன சொன்னாலும் தேசிய கீதத்தில் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




✷ 1595-ஷேக்ஸ்பியரின் ரோமியோர்வும் ஜூலியட்டும் நாடகம் முதன் முதலாக அரங்கேறியது.

✷ 1676-மூன்றாம் பியோதர் ரஷ்யாவின் மன்னனாக முடி சூடினான்.

✷ 1814-நெப்போலியன் பொனபார்ட்டின் பிரெஞ்சு இராணுவம் பிரியென் நகரில் இடம்பெற்ற சமரில் ரஷ்யாவை வெற்றி பெற்றது.

✷ 1819-ஸ்டாம்ஃபோர்ட் ராபில்ஸ் சிங்கப்பூரில் தரையிறங்கினார்.

✷ 1861-கான்சஸ் ஐக்கிய அமெரிக்காவில் 34 ஆவது மாநிலமாக இணைந்தது.

✷ 1863- ஐக்கிய அமெரிக்காவின் இடாகோ மாநிலத்தில் பெயார் ஆற்றருகில் இராணுவத்தினருக்கும் ஷோஷோன் பழங்குடிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமரில் பல நூற்றுக் கணக்கான பழங்குடிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

✷ 1886-ஜேர்மனியரான கார்ல் பென்ஸ் பெற்றோலினால் இயங்கும் முதலாவது தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

✷ 1916-முதலாம் உலகப் போர் பாரிஸ் ஜேர்மனியரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

✷ 1929-சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட லியோன் ட்ரொட்ஸ்கி துருக்கியை அடைந்தார்.

✷ 1940- ஜப்பான், ஒசாக்காவில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற தொடருந்து ஒன்று வெடித்ததில் 181 பேர் கொல்லப்பட்டனர்.

✷ 1944-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் கொனியூச்சி என்ற இடத்தில் சோவியத் துணை இராணுவத்தினரினால் பெண்கள், குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 38 பேர் கொல்லப்பட்டனர்.

✷ 1946-ஐக்கிய அமெரிக்காவில் மத்திய உளவுத்துறை குழு (Central Intelligence Group) அமைக்கப்பட்டது.

✷ 1996-இத்தாலியில் வெனிஸ் நகரில் உள்ள ஒப்பரா மாளிகையான லாஃபெனீஸ் தீயினால் அழிந்தது.

✷ 2005- சீனாவின் பெருநிலப்பரப்பில் இருந்து 1949 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதற் தடவையாக வர்த்தக விமானம் ஒன்று தாய்வானுக்கு வந்து சேர்ந்தது.

### பிறப்புக்கள்

✷ 1860- ஆன்டன் சேகொவ் ரஷ்ய எழுத்தாளர் (இ.1904)

✷ 1866- றொமெயின் ரோலண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1944)

✷ 1926-அப்துஸ் சலாம், நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானிய இயற்பியலாளர் (இ.1996)

✷ 1970-ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், இந்திய ஒலிம்பிக் வீரர்

### இறப்புக்கள்

✷ 1934-பிரிட்ஸ் ஹேபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர் (பி.1868)

✷ 1963- றொபேட் புறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (பி.1874)

✷ 1981- பாலகிருஷ்ணன், நாதஸ்வரக் கலைஞர் (பி.1945)


✷ 1998- பி.எஸ்.பி.பொன்னுசாமி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1908)

### சிறப்பு நாள்

✷ கிப்ரல்டார்- அரசியலமைப்பு தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடகொரியாவை அவதானிக்க ஜப்பானின் செயற்கைக்கோள்



(டோக்கியோ)

வடகொரியா மறைமுகமாக அணு ஆயுதங்கள் தயாரிப்பது, நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளை தயாரிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இதனால் ஜப்பானுக்கு வட கொரியா மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

எனவே, வட கொரியாவின் செயற்பாடுகளை கண்காணிக்க ஜப்பான் உளவு செயற்கை கோள்களை தயாரித்து விண்ணில் செலுத்த முடிவு செய்துள்ளது. இதன் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் 2 உளவு செயற்கை கோள்கள் விண்ணில் ஏவப்பட்டதாக ஜப்பான் அறிவித்துள்ளது. (அ-5)

## அவுஸ்திரேலியாவில் வெள்ளப்பெருக்கு! மூவர் பலி; மக்கள் வெளியேற்றம்

(சிட்னி)

வடக்கு கிழக்கு அவுஸ்திரேலியாவின் பல மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. குவின்ஸ் லேண்ட் மாவட்டத்தில் கரை புரண்டு ஓடும் வெள்ளத்தில் சிக்கி 3 பேர் பலியாகினர். இம் மாவட்டத்தின் பல நகரங்களில் உள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நூற்றுக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் வீட்டின் கூரைகள் மீது ஏறி நின்று தவிக்கின்றனர்.

பண்ட்பெர்க் பகுதியில் உள்ள 2 ஆயிரம் வீடுகள் வெள்ள நீரில் மூழ்கும் நிலையில் உள்ளன. பிரிஸ்பேன் நகரிலும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதால் இங்குள்ள ஆயிரத்து 250 வீடுகள் வணிக நிறுவனங்களும் 3ஆயிரம்வீடுகளும்மூழ்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

குவின்ஸ் லேண்டில் உள்ள 2 1/2 இலட்சம் வீடுகள் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கியுள்ளன. நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள பிரதான வீதிகள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டதால் புறநகர் பகுதிகள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளன.

உலங்குவானூர்தி மூலம் மீட்புப் பணிகள் நடந்து வந்தாலும் மோசமான வானிலை காரணமாக குறிப்பிட்ட இடங்களுக்கு செல்வதில் தாமதம் ஏற்படுவதாக பொலிஸார் கூறினர். (அ-2)

## செக் நாட்டில் முதன்முறையாக ஜனாதிபதி தேர்தல் நடந்தது

செக் நாட்டில் ஜனாதிபதியை மக்களே வாக்களித்து தேர்வு செய்வதற்கான தேர்தல் முதல் முதலாக நடைபெற்றது. இந்த தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு, முன்னாள் பிரதமர் மிலோஸ் ஜெமானும், கன்சர்வேடிவ் கட்சி சார்பில் அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் கரேலும் போட்டியிட்டனர். கடுமையான போட்டி நிலவி வந்தது. இருவேட்பாளர்களும் போட்டி போட்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்றுமுன்தினம் எண்ணப்பட்டன. இதில் 54.8 சத வீத வாக்குகள் கிடைத்தன.

இந்த வெற்றியின் மூலம் செக் நாட்டை ஐரோப்பிய யூனியனில் முக்கிய இடம்பிடிக்க மிலோஸ்ஜெமான் பாடுபடுவார் என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (அ)

## ஆப்கான் குண்டுத்தாக்குதல்; 24 பேர் ஸ்தலத்தில் பலி



(கந்தகார்)

ஆப்கானிஸ்தானில் பல்வேறு இடங்களில் கடந்த 26 ஆம்திகதி நடந்த தாக்குதல் சம்பவங்களில் 24 பேர் கொல்லப்பட்டனர். கந்தகார் நகர பொலிஸாருக்கு அங்குள்ள ஒரு குடியிருப்பு பகுதியில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்தது. பொலிஸார் விரைந்து சென்று மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை கண்டுபிடித்தனர். இது தொடர்பாக 3 பேரை கைது செய்தனர். அவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்த போது குண்டு வெடித்தது. இதில் சிக்கி 8 பொலிஸார், கைது செய்யப்பட்ட இருவர் இறந்தனர்.

குண்டஸ் மாகாணத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப்படை போராளி குண்டை வெடிக்கச் செய்ததில் 10 பொலிஸார் கொல்லப்பட்டனர். கான்ஸ்னி நகரில் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டு ரிமோட் மூலம் வெடிக்கச் செய்யப்பட்டதில் பொலிஸ் உள்ளிட்ட இருவர் இறந்தனர். (அ)

## வடகொரியாவில் பஞ்சம்; 10 ஆயிரம் பேர் பசியால் பலி

வடகொரியாவின் பாரியா மாநிலத்திலும் வடக்கு மற்றும் தெற்கு ஹ்வாங்ஹே மாகாணங்களிலும் பஞ்சம் தலை விரித்தாடுகிறது.

இங்கு பசி தாங்க முடியாமல் சுமார் 10 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர் என்று கூறப்படுகிறது. மேலும் அப்பகுதியில் பசியைப் போக்க உணவு இல்லாததால் மனிதர்கள் சக மனிதர்களை கொன்று தின்னும் அவலம் அதிகரித்துள்ளது.

இதேவேளை, கடந்த 1990 களில் வடகொரியாவில் கடும் பஞ்சம் ஏற்பட்டு 2 இலட்சத்து 40 ஆயிரம் முதல் 35 இலட்சம் மில்லியன் பேர் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து பத்திகையாளர் ஒருவர் கூறுகையில்,

ஒரு மனிதர் பசியின் காரணமாக புதைக்கப்பட்ட தனது பேரனின் சடலத்தை எடுத்து சாப்பிட்டார் என்றும் மற்றொரு நபரோ தனது குழந்தைகளை சமைத்து சாப்பிட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் பஞ்ச கொடுமை குறித்து பெயர் தெரிவிக்க விரும்பாத ஒருவர் கூறுகையில்,

எங்கள் கிராமத்தில் கடந்த ஆண்டு மே மாதம் தனது இரண்டு குழந்தைகளைக் கொன்று சாப்பிட முயன்ற ஒருவருக்கு மரண தண்டனை நிறை வேற்றப்பட்டது.

அந்த நபர் தனது மனைவி வீட்டில் இல்லாத நேரத்தில் முதலில் தனது மகளைக் கொன்றுள்ளார். அதை மகன் பார்த்ததால் அவனையும் கொன்றுள்ளார். மனைவி வீடு திரும்பியதும் இன்று சாப்பிட நமக்கு கறி கிடைத்துள்ளது என்று கூறியுள்ளார்.

இதனால் சந்தேகம் அடைந்த மனைவி இது குறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து இரு பிள்ளைகளின் உடலையும் மீட்டனர் என தெரிவித்துள்ளார். (அ-5)

## மொஸ்கோவில் தீ விபத்து! 10 பேர் பலி; 13 பேர் காயம்



ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் கட்டடத்தின் தரைத்தளத்திற்கு கீழே அமைக்கப்பட்டிருந்த வாகன நிறுத்தும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர்.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் ரஷ்யாவில் வேலை தேடி வந்து அங்கேயே தங்கி பணிபுரிந்து வருகின்றனர். கட்டுமானத் தொழிலில் ஈடுபட்ட பலர் பணிபுரியும் பகுதியிலேயே பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாக கூறப்படுகிறது.

தாஸ்ஹிர் கட்டுமான நிறுவனம் கட்டிவரும் கட்டடத்தில் வாகன நிறுத்தும் இடத்தில் குவிக்கப்பட்டிருந்த குப்பையில் திடீரென தீப்பிடித்ததில் தஜிகிஸ்தானைச் சேர்ந்த 10 தொழிலாளர்கள் பலியானார்கள். இந்த கட்டடத்தில் குடியேற்ற சட்டத்தை மீறி பலர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுகுறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என்று குடியேற்றத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## உலக தரிசனம்

## 21 பேர் மரண தண்டனை விவகாரம்; எகிப்தில் போராட்டம் தொடர்கிறது

## அவசரநிலை பிரகடனம்



(கெய்ரா)

எகிப்தில் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடந்த காற்பந்து விளையாட்டுப் போட்டியின் போது கலவரம் மூண்டது. இதில் ரசிகர்கள் 74 பேர்கொல்லப்பட்டனர். இந்த வழக்கு தொடர்பாக விசாரணை போர்ட் செயித் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதன் இறுதி தீர்ப்பில் 21 பேர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 4 நாட்களாக தலைநகர் கெய்ரோ உட்பட 4 நக ரங்களில் போராட்டம் நடைபெற்றது. பின்னர் அது கலவரமாக மாறியதில் 33 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்தனர். நான்காவது நாளாக தலைநகர் கெய்ரோ தாரிர் சதுக்கத்துடன் போராட்டக்காரர்கள், அரசுப் படையினருடன் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் போர்ட் செயித், சூயெஸ் மற்றும் இஸ்மாலியா நகரங்களில் அவசர நிலைப்பிரகடனத்தை ஜனாதிபதி மொர்சி அறிவித்துள்ளார். இந்நிலையில் மொர்சியின் ஆட்சியில் மதம் மற்றும் பேச்சு சுதந்திரம் இல்லை என்று கூறி எதிர்க்கட்சி ஆட்சி மாற்றம் வேண்டி குற்றஞ்சாட்டி வருகின்றனர். இதேவேளை ஆட்சியில் விரக்தியடைந்த மக்களும் அவருக்கு எதிராக அங்கு போராட்டம் நடத்தி வருவதாக கூறப்படுகிறது. (அ-5)

## பிரான்ஸ் இணையத்தள வாக்கெடுப்பு; ஓரினச் சேர்க்கைக்கு அமோக ஆதரவு

மேற்கத்தேய நாடுகளில் ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கு சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பிரான்ஸ் நாட்டிலும் ஓரினச் சேர்க்கை திருமணத்திற்கான ஆதரவு தொடர்பாக கருத்து வாக்கெடுப்பு ஒன்று இணையத்தளத்தின் வாயிலாக நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அங்கு ஓரினச்சேர்க்கை திருமணத்திற்கு 63 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் நடந்த கருத்து வாக்கெடுப்பில் 60சதவீதம் பேர் ஓரினச் சேர்க்கை திருமணத்திற்கு ஆதரவு தெரிவீத்த நிலையில் இப்போது ஓராண்டு காலத்தில் ஆதரவு 3 சத வீதம் அதிகரித்துள்ளது.

திருமண சட்டத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்போவதாக பிரான்ஸ் அரசு அறிவித்து, அதற்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்ற நிலையிலும் இப்போது ஓரினச்சேர்க்கை திருமணத்திற்கு ஆதரவு பெருகி இருப்பது பிரான்ஸ் நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதேவேளை, ரஷ்யாவில் ஓரினச் சேர்க்கை திருமணத்திற்கும், அது குறித்தான போராட்டங்கள், பிரசாரங்களிற்கும் அந்நாட்டு அரசினால் அண்மையில் பலத்த தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)




வாடிகனில் நடைபெற்ற பிரார்த்தனை கூட்டத்தில் கலந்து கொண்டு உலக அமைதிக்காக சமாதானப் புறாவை பறக்க விடுகிறார் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிவபூமி அறக்கட்டளையினால் சைவ வளர்ச்சிக்கும் சமூக உதவிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் குப்பிளானில் அமைக்கப்பட்ட சிவபூமி ஞான ஆச்சிரம திறப்பு விழா நேற்று நடை பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட சுவாமிகள் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் யாழ்ப்பாணம் கந்தர்மடம், வேதாந்த மடம் சிவத்திரு ஸ்ரீவேத வித்தியாசாகர் சுவாமிகள் மங்கல விளக்கேற்றுவதையும் அமெரிக்க ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீக சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் ஆச்சிரமத்தை திறந்து வைப்பதையும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் உள்ளிட்ட சுவாமிகள் அமர்ந்திருப்பதையும் ஆச்சிரம திறப்பு விழாவில் பங்கு கொண்டர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.ஆர்.கரன்)




# நான்கு பாடசாலைகளில் ஆய்வு கூடங்கள் அமைப்பு

(மல்லாவி)

மகிந்த சிந்தனை முன்னோக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் ஆயிரம் இடைநிலை பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற மகிந்தோதய தொழில் நுட்ப விஞ்ஞான ஆய்வு கூட 'வேலைகள் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் 4 பாடசாலைகள் நடைபெற்று வருவதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

தலா எட்டு மில்லியன் ரூபா செலவில் 50X30 அளவு கொண்ட இரு மாடிக்கட்டடங்களாக அமையவுள்ள இவ் ஆய்வுகூடமானது மு/யோகபுரம் மகாவித்தியாலயம், மு/மாங்குளம் மகாவித்தியாலயம், மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலயம் ஆகிய 4 பாடசாலைகளிலுமே அமைக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# காய்கறி விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவாம்

(கொழும்பு)

காய்கறி விலைகளைக் குறைப்பதற்காக விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகளை கொள்வனவு செய்யும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் உத்தரவின் பேரில் சதொச நிறுவனம் ஊடாக தம்புள்ளை - அம்பாந்தோட்டை - நுவரெலியா - தம்புத்தேகம ஆகிய பகுதிகளில் விவசாயிகளிடம் இருந்து மரக்கறி கொள்வனவு செய்யப்படும்.

225 லக் சதொச நிறுவனங்கள் மூலமாக இவை விநியோகம் செய்யப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரே முறையில் 500 கிலோவுக்கும் கூடுதலாக மரக்கறிகளை வழங்கக்கூடிய விவசாயிகள் சதொச பொது முகாமையாளர் எஸ்.ஏ.ஜயதிலக உடன் 0777328838-0715343947 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (அ-2)

# இளையோருக்கான ஒன்றுகூடல் அநுராதபுரத்தில் நடைபெற்றது

(ஆனைக்கோட்டை)

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் யூ.என்.டி.பி. நிறுவன ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இளையோருக்கான ஒன்றுகூடல் அநுராதபுரம் எல்லேவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெற்ற இவ் ஒன்றுகூடலில் யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து வருகை தந்த இளையோர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதில் கலந்து கொண்ட தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களை ஒன்று சேர்ந்து பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிராம அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மூலமே இவ் ஒன்று கூடலுக்கு இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-5-18)

# பிரிட்டனில் கடும் மழை; இடம்பெயர்ந்தோர் அவதி

பிரிட்டனில் மழை கொட்டும் என்பதால் அரசு இனியும் ரோமானியா, பல்கேரியா நாடுகளிலிருந்து புகலிடம் தேடி வந்தவர்களின் கால அவகாசத்தை நீட்டிக்க இயலாது என்று தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் இனியும் தங்க விரும்புவோர் இன்னும் ஆறுமாதப் பிழைப்புக்கான வேலை வாய்ப்பு, வருமானம் போன்றவற்றைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இங்கு வந்து மூன்று மாதத்துக்குள் வேலை தேடியிருக்க வேண்டும். இல்லையென்றால் இவர்கள் சொந்த நாட்டுக்கு திருப்பியனுப்பப் படுவார்கள் என்றும் அரசு அறிவித்துள்ளது.

போலந்து, ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்ந்த பின்பு அங்கிருந்து லண்டனிற்கு வேலை தேடி வருவோரின் எண்ணிக்கை மிக மிக அதிகமாகிறது.

இவர்களால் இட நெருக்கடி ஏற்படத் தொடங்கிவிட்டது. உள்ளாட்சி மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் எரிக் பிக்கிள்ஸ் என்று கூறியுள்ளார்.

போலந்து, செக் குடியரசு, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து பின்பு ஏறத்தாழ மூன்று இலட்சம் பேர் பிரிட்டனுக்குள் வந்திருப்பதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றார் பிக்கிள்ஸ் மேலும் ரோமேனியா, பல்கேரியா நாட்டைச் சேர்ந்த 29 மில்லியன் பேர் பிரிட்டனில் தங்கியுள்ளனர்.

அதனால் இனியும் இவர்களுக்கான கால அவகாசத்தை நீடிக்க இயலாது என்று பிரிட்டன் அரபு உறுதியாகத் தெரிவித்து விட்டது. (அ-2)

# பழைய மாணவர் சங்க தெரிவு

(மல்லாவி)

யா/தெல்லிப்பழை வீமன்காமம் மகா வித்தியாலயம் மீள்குடியேற்றத்தின் பின் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வித்தியாலயத்திற்காக புதிய பழைய மாணவர் சங்கம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக வித்தியாலய அதிபர் சோமசுந்தரம் இராமநாதன், செயலாளராக சுப்பிரமணியம் கணேசலிங்கம், பொருளாளராக இளையதம்பி ஞானேஸ்வரன், உபதலைவராக சோ. செல்வரத்தினம், உப செயலாளராக அ.இராஜபுஸ்பம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் செயற்குழு உறுப்பினர்களாக 11 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-15)

ஆயுர்வேத வைத்தியர்கள், மக்களின் கவனத்திற்கு!

* நீங்கள் இளநரை, முடி உதிர்வு, வாதம், கை, கால் விறைப்பு, மூட்டுவலி, முதுகு வலி, இடுப்பு வலி என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
* இந்நோய்களுக்குப் பலவழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
* இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் எம்மிடம் உண்டு

ஆயுர்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு

* எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்டு இருமல் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், சிரப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் நாட வேண்டிய இடம்

சிவா நறுமணப் பூங்கா
இல - 268, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 021 222 2567

(அ/262)

காணி, வீடு விற்பனைக்கு

காணி: புத்தூர் , நிலாவரைச் சந்தியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஹோட்டல், கடைத் தொகுதி கட்டுவதற்கு ஏற்ற காணி.

வீடு: சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் 7 ½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு


காணி: திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் நாவலடி லேனில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

காணி: பருத்தித்துறை முதலாம் கட்டைக்கும் பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கும் இடையில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீருக்கடியிலிருந்து புறப்பட்டது ஏவுகணை; இந்தியாவின் அதிரடி நடவடிக்கை!



நீருக்கடியிலிருந்து பாய்ந்து சென்று இலக்கத்தைக் தாக்கும் கே-5 ஏவுகணையை இந்தியா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்த்தது.

ஆந்திராவின் விசாகப்பட்டினம் கடற்பகுதியில் இந்த் சோதனை நடைபெற்றது. வங்காள விரிகுடாவில் நீருக்கடியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் இருந்து இந்த ஏவுகணை பாய்ந்து சென்றது.

அணு ஆயுதங்களை எடுத்துச் சென்று சுமார் ஆயிரத்து 500 கிலோமீற்றர் தூரம் வரையுள்ள இலக்கை இந்த ஏவுகணை தாக்கும் திறன் வாய்ந்ததாகும். இந்த ரக ஏவுகணைகளில் இதுவே இந்தியாவில் முற்றிலுமாகத் தயாரிக்கப்பட்ட முதல் ஏவுகணையாகும்.

இதன் மூலம் நிலம், ஆகாயம், நீர் என மூன்று நிலைகளிலும் இருந்தும் எதிரி இலக்குகளை ஏவுகணை மூலம் தாக்கும் முழு ஆற்றலை இந்தியா பெற்றுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து இதனைச் செலுத்த முடியும் என தெரிய வருகிறது.

இது தொடர்பாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் வி.கே.சாரஸ்வத் கூறியபோது,

நடுத்தர ரகத்தைச் சேர்ந்த 10 அடி உயரமுள்ள கே-5 ரக ஏவுகணை வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளது. சோதனையின் போது வானில் சுமார் 20 கிலோமீற்றர் தூரம் உயர பறந்து சென்று கடலில் அமைக்கப்பட்டிருந்த இலக்கை சரியாகத் தாக்கியது.

அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து இந்தியாவும் இந்த வகை ஏவுகணையைப் பெற்றுள்ளது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அமைப்பின் ஐதராபாத் நகர ஆய்வகத்தில் இந்த ஏவுகணை தயாரிக்கப்பட்டது.

இதுவரை தரை மற்றும் விமானத்திலிருந்து மட்டுமே அணுவாயுத ஏவுகணைகளைச் செலுத்தும் திறனை இந்தியா பெற்றிருந்தது. இப்போது நீருக்கடியில் இருந்தும் அணு ஆயுதத்தை எடுத்துச் செல்லும் ஏவுகணையைப் பெற்றுள்ளது. அடுத்த கட்டமாக இதே போன்ற மேலும் இரு ஏவுகணைச் சோதனைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (அ-5)

# இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று ஐரோப்பாவுக்கு விஜயம்

வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இரண்டு முக்கிய ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி மற்றும் பெல்ஜியத்துக்கு நான்கு நாட்கள் பயணம் மேற்கொள்ளவுள்ளார்கள்.

நேற்று பயணத்தை ஆரம்பித்த அவர் முதல் இரண்டு நாட்கள் ஜெர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் குய்டா வெஸ்டர்வெல், பிரதமர் ஏஞ்செலா மெர்க்கல் ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் பெல்ஜியத்தில் தங்கியிருந்து பெல்ஜியம் துணைப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான தீடியர் ரெய்ன்டர்ஸ் மற்றும் ஐரோப்பிய யூனியன் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

பயங்கரவாதம் உள்ளிட்ட சவால்களை சமாளிக்க பொதுவான அணுகுமுறைகளை மேம்படுத்துவது, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இந்திய-ஐரோப்பிய யூனியன் வர்த்தக ஒப்பந்தத்தை செயற்படுத்துவது வர்த்தகத்தை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அந்நாடுகளின் தலைவர்களுடன் குர்ஷித் விவாதிக்கவுள்ளார். (அ)

# எலி விழுந்த உணவை உண்டு மாணவர்கள் மயக்கம்

உத்தரபிரதேசம் மாநில ஹர்டவுலி கிராமத்தில் மாணவர்கள் தங்கி படிக்கும் ஆரம்ப நிலை பாடசாலை ஒன்று உள்ளது. இந்த பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் இறந்த எலி கிடந்தது உணவு பரிமாறப்பட்ட பின்னர் தெரிய வந்தது.

இதற்கிடையில் இந்த உணவை சாப்பிட்ட 5 முதல் 12 வயதுக்குட்பட்ட 6 மாணவர்கள் மயங்கி விழுந்தனர். இந்த தகவல் பற்றி அறிந்த வைத்தியர்கள் உடனடியாக அந்தப் பாடசாலைக்குச் சென்று மயங்கிக் கிடந்த மாணவர்களுக்கு சிகிச்சை அளித்தனர்.


அவர்களின் உடல்நிலை முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் எலி கிடந்தது குறித்து பாடசாலை நிர்வாகத்திடம் விளக்கம் கேட்டுள்ளதாகவும் பண்டா மாவட்ட கல்வி அதிகாரி கூறியுள்ளார். (அ-




# தந்தையின் அஸ்தியை தாய்நாட்டிற்கு கொண்டு வருக

## நேதாஜியின் மகள் அனிதா கோரிக்கை

(கொல்கத்தா)



ஜப்பானிலுள்ள நேதாஜி அஸ்தியை இந்தியாவுக்கு கொண்டு வர வேண்டுமென அவரின் மகள் அனிதா கோரியுள்ளார்.

ஐரோப்பாவில் நேதாஜி என்ற நூல் வெளியீட்டு விழா கொல்கத்தாவில் நடைபெற்றது.

இவ்விழாவில் நேதாஜியின் மகள் அனிதா பங்கேற்றார். அவரிடம் ஜப்பானில் வைக்கப்பட்டுள்ள உங்கள் தந்தையின் அஸ்தியை இந்தியாவுக்கு கொண்டுவர வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா என்று கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர்,

தாய்வானில் நடந்த விமான விபத்தில் தான் என் தந்தை மரணமடைந்தார் என நான் உறுதியாக நம்புகிறேன். ஜப்பானில் உள்ள ரென்கோஜி ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள அஸ்தி என் தந்தையின் அஸ்திதான் என்பதிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

சாத்தியப்பட்டால் ஜப்பானிலிருந்து என் தந்தையின் அஸ்தியை இந்தியாவுக்கு கொண்டுவர வேண்டும் எனக் கூறியுள்ளார். (அ-5)



டில்லியில் பா.ஜ.தலைவர் ராஜ்நாத் சிங்கை சந்தித்து குஜராத் முதல் வர் நரேந்திரமோடி பூச்செண்டு வழங்குவதை படத்தில் காணலாம்.

# தனித்தெலுங்கானா மாநில கோரிக்கையை வலியுறுத்தி ஐதராபாத்தில் போராட்டம்

## எம்.எல்.ஏ உட்பட பலர் கைது

(ஐதராபாத்)

தனி தெலுங்கானா மாநில கோரிக்கையை வற்புறுத்தி ஐதராபாத்தில் தடையை மீறி போராட்டம் நடத்திய எம்.எல்.ஏ உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் மீது கல் வீசி தாக்கிய மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டுகள் வீசப்பட்டதால் பதற்றம் ஏற்பட்டது.

### தடையை மீறி போராட்டம்

தலைநகர் ஐத்ராபாத்தில் சட்ட சபை வளாகம் அருகில் உள்ள இந்திரா பூங்காவில் 36 மணி நேர தொடர் போராட்டம் நடத்தும்படி மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. இந்த போராட்டத்திற்கு பொலிஸார் அனுமதி மறுத்ததால் தடையை மீறி போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.


அதன்படி நேற்று முன்தினம் காலை தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சித் தலைவர் சந்திரசேகரராவின் மகனும் எம்.எல்.ஏவுமான ராமராவ் தலைமையில் பல்வேறு அமைப்புகளின் பிரநிதிகள், தொண்டர்கள் இந்திராபூங்கா நோக்கி ஊர்வலமாக செல்ல முயன்றனர். இதனையடுத்து பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தி 100 இற்கும் மேற்பட்டவர்களை கைது செய்தனர்.

### தெலுங்கு தேச சட்டமன்ற உறுப்பினர்கள்

போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து தெலுங்கு தேசம் கட்சி எம்.எல்.ஏக்கள் சட்டசபை வளாக காந்தி சிலை முன்பு கூடி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டம் எதிரொலியாக தலைநகர் ஐதராபாத் மற்றும் மாநிலத்தின் இதர பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

போராட்ட களத்திற்கு செல்லும் வீதியில் தடுப்புகளை ஏற்படுத்திய பொலிஸார் சட்டசபை உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு மாற்றுவழி



யில் போக்குவரத்தை திருப்பிவிட்டனர்.

### கல்வீச்சு, கண்ணீர்ப்புகை

இதற்கிடையில் தெலுங்கானா போராட்டத்தின் மையப்பகுதியாக செயற்பட்டுவரும் ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் ஆளுநர்மாளிகையை முற்றுகையிட ஊர்வலமாக செல்ல முயன்றனர்.

பல்கலைக்கழக வளாக வாயில்கள் அனைத்தையும் மூடி அவர்களை தடுத்த பொலிஸார் மீது மாணவர்கள் கல்வீசி தாக்கினர். உடனே பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி மாணவர்களை விரட்டினார்கள். இதனால் பதற்றம் ஏற்பட்டது. (அ-2)

# முல்லைப்பெரியாறு அணை விவகாரம்; ஏப்ரல் மாதம் இறுதிகட்ட விசாரணை

முல்லைப்பெரியாறு அணையின் இறுதிக்கட்ட விசாரணை எதிர்வரும் ஏப்ரல் 9 ஆம் திகதி ஆரம்பமாகும் எனஉச்சநீதிமன்றம்தெரிவித்துள்ளது.

முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு மற்றும் அதிகபட்ச நீர் இருப்பு வைத்தல் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடந்து வருகிறது. தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ள உச்சநீதிமன்றம் கடந்த 2006 ஆம் ஆண்டு அனுமதியளித்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள கேரள அரசு உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக சட்டமன்றத்தில் அணை பாதுகாப்பு மசோதாவை நிறைவேற்றியது. அதன்மூலம் முல்லைப்பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 126 அடியாக குறைக்கத் திட்டமிடப்பட்டது.

இதனிடையே அணையின் பலம் மற்றும் பாதுகாப்பு பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்றை அளிக்குமாறு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஆனந்த் தலைமையில் நிபுணர் குழு அமைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் அறிக்கையைதாக்கல்செய்த ஆனந்த்குழு அணை பலமாக இருப்பதாகவும் அதில் 142 அடி வரை நீரை தேக்கி கொள்ளலாம் எனவும் பரிந்துரைத்தது. இந்நிலையில் இந்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு வந்தது.

இதனையடுத்து ஹோலிப் பண்டிகைக்கு பின்பு இந்த வழக்கின் விசாரணை நடத்த வேண்டும் என்று கேரளா சார்பாக மனு கொடுக்கப்பட்டது. மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் வழக்கின் விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அறிவியல் கலவாத சமய உணர்வு முடமானது. சமய உணர்வில்லாத அறிவியல் குருடானது.
> –ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குப்பிளான் மண்ணில் ஒரு குட் பிளான்

ஈழத்திற்கு சிவபூமி என்று பெயர். இப் பெயரை ஈழத்தவர்கள் தங்கள் தேசத்துக்கு சூட்டிக் கொண்டவர்கள் அல்ல. மாறாக, திருமந்திரத்தைத் தந்தருளிய திருமூலர் ஈழ மண்ணை சிவபூமி என்று நாமம் சூட்டி அழைத்தார்.

சிவபூமி என்று புகழப்பட்ட எங்கள் ஈழத்திரு நாட்டில், சைவசமயத்தின் நிலைமை கவலைக்குரியதாகி வருகிறது.

மதமாற்றத்தின் கொடுஞ் செயலில் ஈடுபடுவோரால் மட்டுமன்றி, சைவாலயங்களை நோக்கிய **இருட்டுத்தாக்குதல்** நடத்தும் ஒரு பெரும் தீய சக்திகளின் காடைத்தனங்களும் எங்கள் சைவாலயங்களில் இருக்கக் கூடிய வரலாற்றுப் பெருமை மிக்க விக்கிரகங்களை – சிற்பங்களை நிர்மூலமாக்கி வருகின்றன.

இது தவிர பித்தளையை, செப்பை கிலோவுக்கு நிறுத்து விற்கும் கயவர் கூட்டம் ஒன்று சைவாலயங்களில் இருக்கக் கூடிய, விலை உயர்ந்த ஐம்பொன் வகைகளைத்திருடிச்சென்று விற்று நாசமறுக்கின்றது.

இவையொரு புறம் நடந்தேற மறுபுறத்தில் எங்கள் இளம் சமூகத்தின் கலாசாரப் பிறழ்வுகள், ஆன்மிகத்தின் பால் ஈடுபாடற்ற போக்குகள் தீராக்கவலையைத் தருகின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், குறைகளை மட்டும் கூறிக்கொண்டிராமல், எங்கள் சமயத்தின் பெயரால் உதவியும் ஆற்றுகையும் ஞான உபதேசமும் செய்தல் வேண்டும் என்ற நன் நோக்கில் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையிலான சிவபூமி அறக்கட்டளை அமைப்பால் குப்பிளான் மண்ணில் சிவபூமி ஞான ஆச்சிரமம் என்ற அமைப்பு நிறுவப்பட்டு நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சித்தர்களும் தவஞான யோகிகளும் மனித வாழ்வுக்காக காட்டித்தந்த தியான வழிபாட்டிற்கு ஊக்கமும் சந்தர்ப்பமும் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஞானநிலையம் சீர்மியப்பணியையும் ஆற்றவுள்ளமை பாராட்டுதற்குரியது.

சைவ சமயத்தின் எதிர்காலம் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமாயின் இது போன்ற அமைப்புகள் அவசியம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

எனவே எங்கள் இளம் சமூகம் குப்பிளான் மண்ணில் அமைந்துள்ள ஞான ஆச்சிரமத்தின் பயனை நிறைவாக அனுபவிக்க வேண்டும் என்பது நம் பேரவா.

அதேநேரம் ஒரு புதிய சிந்தனையில் இந்த ஞான ஆச்சிரமத்தை அமைத்த கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும் அமெரிக்காவின் ஹாவாய் ஆச்சிரமத்தில் ஞானத்துறவியாக இருக்கின்ற எங்கள் மண்ணின் தொண்டுநாத சுவாமிகளும் போற்றுதற்குரியவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக குப்பிளானில் உள்ள தனது காணியையும் வீட்டையும் ஞான ஆச்சிரமத்திற்காக ஈகை செய்த கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் ஆ.ஸ்ரீஸ் கந்தமூர்த்தி அவர்களின் உயர்ந்த உள்ளத்தின் பாங்கு அற்புதமானது.

இந்த நல்ல சிந்தனைகள் அனைத்துமாகச் சேர்ந்து குப்பிளான் மண்ணில் ஒரு குட் பிளான் எழுகைப் பெற்றுள்ளது என்றால் அதில் மிகையேதும் இல்லை.

# இந்திய வீட்டுத்திட்டத்தில் தமிழ் மக்கள் புறக்கணிப்பு!

## கவனயீர்ப்பு நிகழ்வு நாளை

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத்திட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்படுவதை வெளிப்படுத்தும் நோக்கத்துடனேயே நாளை புதன் கிழமை எமது அமைப்பினால் கவனயீர்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத்திட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிப்படுவதை வெளிப்படுத்தும் நோக்கத்துடனேயே தமது அமைப்பினால் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதே தவிர இது எந்த ஒரு இனத்திற்கும் எதிரான போராட்டம் அல்ல என வவுனியா மாவட்ட மீள்குடியமர்ந் தோர் நலன் பேணும் அமைப்புத் தெரிவித்துள்ளது.

நாளை புதன்கிழமை வவுனியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வு தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலே வவுனியா மாவட்ட மீள்குடியமர்ந்தோர் நலன்பேணும் அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போர் முடிபுக்குவந்து மூன்றரை வருடங்களுக்கு மேலான நிலையில் போரினால் வீடுகள் சொத்துக்கள் இழந்த எமக்கு எமது வாழ்வாதாரங்களைக் கொண்டு செல்லத்தக்க வகையிலான நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. மீள்குடியேற்றம் என்றபெயரில் எம்மை வன்னியில் கொண்டு வந்து விட்டார்களே தவிர, கௌரவமான வாழ்க்கைக்கான வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை.

இந்த நிலையில் இந்திய அரசின் ஆதரவுடனான வீடமைப்புத்திட்டம் விரக்தியுடன் இருந்த நமக்கு ஓரளக்காவது நம்பிக்கையைத்தருவதாக அமைந்திருந்தது.

இதன் மூலம் எமது வீட்டுப்பிரச்சினை தீர்க்கப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால், இந்த வீடமைப்புத்திட்டதில் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் எமக்கு மீட்சியே இல்லையா என்ற கேள்வியை எழுப்புவதாகவே அமைந் திருக்கிறது.

இவர்களுக்கு வீடமைப்புத்திட்டத்தில் பெரும் பாரபட்சம் காட்டப்படுவதாக நாம் குற்றச்சாட்டுவதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பாதிப்புக்குள்ளாகி உண்மையில் உதவி தேவையாக உள்ள தமிழர்களில் 10 முதல் 20 சதவீதம் வரையானவர்களுக்கே இந்த வீடமைப்புத்திட்ட உதவி வழங்கப்படுகின்றது.

இங்கு தமிழர்கள் திட்டமிட்ட முறையில் புறக் கணிக்கப்பட்டுள்ளார்கள். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாம் பல தடவை சுட்டிக்காட்டிய போதும் அதனை உதாசீனம் செய்யும் வகையிலே அவர்களுடையசெயற்பாடுகள் இருந்துள்ளன.

எமது போராட்டம் முஸ்லிம் மக்களுக்கு எதிரானது என திட்டமிட்ட முறையில் பரப்பப்படும் கருத்துக்களை நாம் உறுதியாக மறுக்கின்றோம்.

அதே வேளையில் எந்தவொரு அரசியல் கட்சியின் தூண்டுதலாலும் இதனை நாம் ஏற்பாடு செய்யவில்லை. பிரச்சினை களை வெளிப்படுத்துவதற்காக எமது மக்களின் வேண்டுகோளின் பேரிலேயே இதனை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்தப்போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்லாது, எமது ஆதங்கத்தைப் புரிந்துகொண்டு எமது நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்க முன் வருபவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம்.

இவ்வாறு வனியா மாவட்ட மீள்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பு தன்னுடைய அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. (செ-9,266)

# பௌத்த பிரச்சினைகளைப்பற்றிப் பேச நாடாளுமன்றத் தெரிவுக்குழு வேண்டும்

## ஞானசார தேரர் கோரிக்கை

(கொழும்பு)

பௌத்தமக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டுக்குள் அதிகரித்துவரும் சமய அடிப்படை வாதம், இனவாதம் மூலதர்ம வாதம் போன்ற பல்வேறு வகையான நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அதனை தடுப்பதற்காக விசேட நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட வேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இவ்வாறான தெரிவுக்குழு நியமிக்கப்படுவது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகவும் இதன் மூலம் அடிப்படைவாத, மத நல்லிணக்கத்தில் குழப்பங்களை ஏற்படுத்தும் நபர்கள் மற்றும் குழுக்களை அடையாளம் காண முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மத அடிப்படைவாதம் நாட்டில் பரவில்லையென பௌத்தவிவகார பிரதி அமைச்சர் குணவர்த்தன கூறி யுள்ள போதிலும் தெரிவுக்குழுவை நியமிப்பதன் மூலம் அதற்கான பதில் கிடைக்கும். அதேபோல் பௌத்தர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் ஞானசார தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியா சாலையின் 120 ஆவது ஆண்டு நிறைவும், புதிய கட்டட திறப்பு விழா வும் பரிசளிப்பு விழா மற்றும் தமிழ் காண்டம் சிறப்பிதழ் வெளியீடும் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாசாலை அதிபர் கே.சசிதரன் தலைமையில் வித்தியாசாலை புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி சிறப்பு விருந்தினராக கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுக்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-6)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மீக எழுச்சி ஏற்படட்டும்!



அன்பு, இரக்கம் இவற்றைச் செயற்படுத்த வாய்ப்பளித்த இறைவனை துதிப்பதுடன் உதவி செய்தவர்களை இறைவனாக எண்ணவேண்டும்.

இரக்கமுள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகியவை நமக்குத் தேவை.

மனிதப்பிறவி ஞானமும் பக்தியும் அடைவதற்காக உருவாக்கப்பட்டுள்ளதால் ஆன்மீக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப்போகிறது.

உடல் பலவீனத்தையோ, மனபலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகாமல் தைரியத்துடன் வீரனாகத் திகழவேண்டும்.

இந்தியாவில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால் முதலில் ஆன்மீக எழுச்சி உண்டாகவேண்டும். அரசியல் கருத்துக்களை பரப்புவதற்கு முன்னால் நாட்டை ஆன்மீக வெள்ளத்தில் மூழ்கடிக்கவேண்டும்.

தன்னலம் இல்லாமல் நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடம் திரும்பிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் 2013 மகளிர் உலகக்கிண்ணப் போட்டியில்

# களமாட இந்தியா வந்தது பாகிஸ்தான் மகளிர் படை



பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் 2013 மகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இந்தியாவுக்கு வந்தது பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி. இவர்களின் வருகையை ஒட்டி விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

மகளிர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்காக மும்பை, கட்டாக் ஆகிய இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகள் உட்பட 8 அணிகள் பங்குகொள்கின்றன. பிரிவு "ஏ" மற்றும் பிரிவு "பி" என இருபிரிவுகளாக மோதுகின்றன.

இந்திய எல்லையில் நிலவும் பதட்டம் காரணமாக பாகிஸ்தான் அணி வருகைக்கு சிவசேனா, பஜ்ரங் தளம் அமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதனால் பாகிஸ்தான் இடம்பெற்ற "பி" பிரிவு ஆட்டங்கள் மும்பையில் இருந்து ஒரிசா மாநிலம் கட்டாக்குக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் பாக்.கிரிக்கெட் வீராங்கனைகள் நேற்று ஒடிசா தலைநகர் புபனேஸ்வர் வந்து சேர்ந்தனர். அவர்களின் வருகையையொட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படடிருந்தன. ஆனால் விமான நிலையத்திலோ அல்லது விளையாட்டு மைதான அருகிலோ பலமான எதிர்ப்பு போராட்டம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது. பாகிஸ்தான வீராங்கனைகள் தங்கியுள்ள ஒரிசா கிரிக் கெட் சங்க வளாகத்திலும், கட்டாக் பாராபதி மைதானத்திலும் பாதுகாப்பிற்காக சிறப்பு பாதுகாப்பு படையை சேர்ந்த இராணுவ வீரர்கள் உட்பட 600 பொலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அணி முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை பெப்.01 ஆம் திகதி சந்திக்கிறது. நியூசிலாந்துடன் 3 ஆம் திகதியும் தென்னாபிரிக்காவுடன் 5ஆம் திகதியும் மோதுகிறது.

## லயனல் மெஸ்சி புதிய சாதனை



மாட்ரிட்டில் நடைபெற்ற "லா லிகா" காற்பந்து போட்டியில் பார்சிலோனா அணி, 5-1 என்ற கோல்கணக்கில் ஒசாசுனா அணியை வென்றது. இப்போட்டியில் ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்சி 4 கோல்கள் அடித்தார். இதன்மூலம் அடுத்தடுத்து 11 "லா லிகா" போட்டிகளில் கோல்களை அடித்த முதல் வீரர் என்ற சாதனையை அவர் எட்டினார்.

இதற்கு முன்பு பார்சிலோ அணிக்காக விளையாடிய மரியானோ மார்ட்டின், பிரேசிலின் ரொனால்டோ ஆகியோர் அடுத்தடுத்து 10 போட்டிகளில் கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. அதனை கடந்த ஆண்டே மெஸ்சி சமன் செய்தது குறிப்பிடத்தக்கது. இந்த "லா லிகா" போட்டிகளில் 33 கோல்கள் அடித்துள்ள மெஸ்சி (வயது 25), லா லிகா போட்டிகளில் 200 கோல்களைக் கடந்த இளம் வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

## 'டொஸ்'இல் தோற்றோம்; போட்டியை இழந்தோம் – டோனி

இந்தியாவுக்கு எதிரான இறுதி ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப் போட்டியில் ஏற்பட்ட தோல்வி குறித்து இந்திய அணி தலைவலர் டோனி கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த ஆடுகளத்தில் தொடக்கத்தில் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். அதை இங்கிலாந்து வீரர்கள் சரியாக பயன்படுத்திக் கொண்டது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. டொஸ் (நாணயச் சுழற்சி) ஐ இழந்ததே தோல்விக்கு முக்கிய காரணமாக கருதுகிறேன். 30 முதல் 40 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்துவிட்டோம்.

நாங்கள் இந்த தொடரில் சிறப்பாக விளையாடி 3-1 என்ற முன்னிலையை பெற்றோம். அஸ்வின் பந்து வீச்சும், கம்பிரின் துடுப்பாட்டம் குறித்தும் நான் அதிகமாக கவலைப்படவில்லை. 2015 ஆம் ஆண்டுக்கான உலக கிண்ணத்துக்கு 15 பேர் கொண்ட இந்திய அணியை தேர்வு குழுவினர் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவு செய்ய வேண்டும். இவ்வாறு டோனி கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணித் தலைவர் குக் கூறும்போது, 'டொஸ' வென்றது மகிழ்ச்சி. எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாக வீசினார்கள். பெல் ஆட்டம் அபாரமாக இருந்தது என்றார்.

# சாதனைகளுடன் முடிந்த அவுஸ்திரேலிய டெனிஸ்

மெல்பேர்னில் நடைபெற்ற 101 ஆவது அவுஸ்திரேலிய டெனிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பெலாரசைச் சேர்ந்த விக்டோரியா அஷரெங்காவும் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டனர். வெற்றிபெற்ற இருவரும் அண்மையில் வெளியிடப்பட்ட டெனிஸ் தரப்பட்டியலில் முதல் நிலைவீரர்களாக உள்ளனர். இப்போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச் பல புதிய சாதனைகளை பதித்திருக்கிறார்.

### ஆண்கள் ஒற்றையர் ஆட்டம்

அவுஸ்திரேலிய டெனிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரேயுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் செற்றை முர்ரே 7-6 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜோகோவிச், 2 ஆவது செற்றை 7-6 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். தொடர்ந்து அசத்திய ஜோகோவிச், 3ஆவது செற்றை 6-3 என வென்றார். நான்காவது செற்றை முர்ரே, 2-6 என கோட்டைவிட்டார். மூன்று மணி நேரம் 40 நிமிடம் வரை நீடித்த இறுதி ஆட்டத்தில் ஜோகோவிச் 6-7, 7-6, 6-3, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

இறுதியாட்டத்தில் அசத்திய ஜோகோவிச், அவுஸ்திரேலிய டெனிஸில் 4ஆவது முறையாக (2008, 2011, 2012, 2013) சம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் அதிக முறை சம்பியன் பட்டம் வென்றவர்கள் வரிசையில் 2ஆவது இடத்தை அமெரிக்காவின் அகாசி (1995, 2000, 2001, 2003), சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரருடன் (2004, 2006, 2007, 2010) பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் ஆஸ்திரேலியாவின் ராய் எமர்சன் (6 முறை, 1961, 1963-67) உள்ளார்.

இதுதவிர ஜோகோவிச் (2011-13), ஆஸ்திரேலிய போட்டியில் "ஹட்ரிக்" பட்டம் வென்ற மூன்றாவது வீரரானார். முன்னதாக ஆஸ்திரேலியாவின் ராய் எமர்சன் (1963-67), ஜாக் கிராவ்போர்டு (1931-33) ஆகியோர் இச்சாதனை படைத்திருந்தார்.

### பெண்கள் ஒற்றையர் ஆட்டம்

பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை வீராங்கனையும் பெலாரசைச் சேர்ந்தவரான விக்டோரியா அஷரெங்காவும், உலகின் 6ஆம் நிலை வீராங்கனையும் சீனாவைச் சேர்ந்தவருமான லீ நா உம் மோதினர்.

இப்போட்டியில் முதல் செற்றை 4-6 என்ற கணக்கில் இழந்த விக்டோரி அஷரெங்கா, அதன் பின்னர் சுதாகரித்து 6-4, 6-3 என்ற கணக்கில் வெற்றிபெற்றார்.

### ஆண்கள் இரட்டையர் ஆட்டம்

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த உலகின் முதல்நிலை ஜோடியான பொப் பிரையன், மைக் பிரையன் சகோதரர்கள், நெதர்லாந்தைச் சேர்ந்த றொபின் ஹாஸ், இகோர் சிஜ்சிலிங் ஜோடியை 6-3, 6-4 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிபெற்று சம்பியன்களாகினர்.



பெலாரசைச் சேர்ந்தவரான உலகின் முதல்நிலை வீராங்கனை விக்டோரிய அஷரெங்கா வெற்றிக் கிண்ணத்தை கட்டி அணைத்தபோது....

### பெண்கள் இரட்டையர்

மகளிர் இரட்டையர் இறுதிப்போட்டியில், இத்தாலியின் சாரா எர்ரானி-ராபர்ட்டா வின்சி ஜோடி, அவுஸ்திரேலியாவின் பார்ட்டி-டெல்லக்வா ஜோடியுடன் மோதியது. 3 செற் ஆக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6-2, 3-6, 6-2 என்ற கணக்கில் வீழ்த்தி அவுஸ்திரேலிய மகளிர் இரட்டையரில் பட்டம் வென்ற முதல் இத்தாலி ஜோடி என்ற பெருமையையும் எரானி-வின்சி ஜோடி பெற்றது.



வெற்றிக் களிப்பில் கிண்ணத்தை முத்தமிடும் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்



அமெரிக்க சகோதரர்களும் உலகின் முதல்நிலை ஜோடிகளுமான பொப் பிரையன், மைக் பிரையன் ஆகியோர் வெற்றியை பகிர்ந்துகொள்ளும் போது......

### கலப்பு இரட்டையர் ஆட்டம்

கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் ஜார்மிலா காஜ்டோசோவா, மாத்யூ எப்டன் ஜோடி, செக் குடியரசின் லாசி, பிரான்டிசெக் செர்மக் ஜோடியை சந்தித்தது. இதில் அபாரமாக ஆடிய அவுஸ்திரேலிய 6-3, 7-5 என்ற கணக்கில், எளிதாக வென்று சம்பியன் பட்டம் வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணி அசத்தல் வெற்றி

# தொடரையும் முழுமையாக கைப்பற்றியது



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 2-வது மற்றும் கடைசி இருபது-20 போட்டியில் இலங்கை அணி டக்வோர்த் லூயிஸ் முறையில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடியது.

முதல் இருபது-20 போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2-வது மற்றும் இறுதியுமான இருபது-20 போட்டி நேற்றையதினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 161 ஓட்டங்களை எடுத்தது.

மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், திஸார பெரேரா 35 ஓட்டங்களையும், ஜீவன் மெண்டிஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனையடுத்து அவுஸ்திரேலிய அணி 162 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது.

10 ஓவர்களில் அவ்வணி 2 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழை காரணமாக ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

அதன்போது ஷோன் மார்ஷ், ஜோர்ஜ் பெய்லி ஆகியோர் ஆட்டமிழக்காமல் தலா 22 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

மழைவிட்டு ஆட்டம் மீண்டும் ஆரம்பமான போது டக்வோர்த் லூவிஸ் முறையில் அவுஸ்திரேலிய அணிக்கு 15 ஓவர்களில் 122 என்ற புதிய வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இவ் இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி குறிப்பிட்ட ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஷோன் மார்ஷ் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட இத்தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இலங்கையின் திஸார பெரேரா தெரிவானார்.

## நெடுந்தீவு பிரதேசத்திற்கு உட்பட்ட உதைபந்து

## சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன்

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் குழு விளையாட்டுக்களில் ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி கடந்த 27-ம் திகதி நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகமும், சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. மற்றைய அரையிறுதிப் போட்டியில் ஐக்கிய தீப விளையாட்டுக் கழகமும், வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.





இதில் வளர்மதி விளையாட்டுக் கழகம் தண்டனை உதையின் மூலம் 3:2 என்ற ரீதியில் வெற்றி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இவ்விறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உதைபந்தாட்ட ஆண்களுக்கான 2013-ம் ஆண்டுக்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது.

## நெடுந்தீவு பிரதேசத்திற்குட்பட்ட கிரிக்கெட் போட்டி

## சென்.அன்ரனீஸ், சென்.அன்ரனீஸ்யூத் சம்பியன்



நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் குழு விளையாட்டுக்களில் இரண்டாவதாக ஆண், பெண் இருபாலாருக்குமான துடுப்பாட்டப் போட்டி கடந்த 26-ம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்



கழகமும், சென்.அன்ரனீஸ் யூத் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. மற்றைய அரையிறுதிப் போட்டியில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், ஐக்கிய தீபம் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரி வாகியது. இவ்விறுதிப் போட்டியில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று துடுப்பாட்ட ஆண்களுக்கான 2013-ம் ஆண்டுக்கான வெற்றிக் கேடயத்தினை தன தாக்கிக் கொண்டது.

இப்போட்டியின் பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. மற்றைய அரையிறுதிப் போட்டியில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், சென்.அன்ரனீஸ் யூத் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இதில் சென்.அன்ரனீஸ் யூத் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இவ்விறுதிப் போட்டியில் சென்.அன்ரனீஸ் யூத் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று துடுப்பாட்ட பெண்களுக்கான 2013-ம் ஆண்டுக்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது.

## நெடுந்தீவு பிரதேசத்திற்குட்பட்ட எல்லே போட்டி

## சென்.ஜோன்ஸ், உதயசூரியன் சம்பியன்





நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் குழு விளையாட்டுக்களில் முதலில் எல்லே ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டி கடந்த 25-ம் திகதி நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில்சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகமும், சென்.அன்ரனீஸ் யூத் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் 11:03 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

மற்றைய அரையிறுதிப்போட்டியில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும், வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இதில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 21:05 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இவ்விறுதிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் 07:05 என்ற ரீதியில் வெற்றி பெற்று எல்லே ஆண்களுக்கான 2013-ம்ஆண்டுக்கான வெற்றிக்கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியின் பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும், சென்.அன்ரனீஸ் யூத் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற ரீதியில் வெற்றி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இவ்விறுதிப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற ரீதியில் வெற்றி பெற்று எல்லே பெண்களுக்கான 2013-ம் ஆண்டுக்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டிக்கு நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்கள் கலந்து கொண்டு போட்டியினை சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சரவை நேற்று...

அலரிமாளிகையில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் நடைபெற்ற பதவிப் பிரமாண நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் டி.எம்.ஜயரட்ண மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆளும் தரப்புக்கு ஆதரவளிக்கும் தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் இப்புதிய அமைச்சரவை மாற்றத்தில் இடமளிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சரவை மாற்றத்திற்கு இணங்க ஐந்து புதுமுகங்கள் இந் நியமனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் சீனிக் கைத்தொழில் அமைச்சுக்கு லக்ஸ்மன் செனவிரத்ன புதுமுகமாக சேர்க்கப்பட்டுள்ளார்.

பிரதமர் உட்பட முன்னர் இருந்த அமைச்சரவையில் 50 அமைச்சர்கள் இடம்பெற்றிருந்தனர்.

நேற்று 5 பிரதி அமைச்சர்கள் அமைச்சர்களாக பதவியேற்றம் பெற்றதனை அடுத்து அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது.

லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, துமிந்த திசாநாயக்க, ஜயரட்ன ஹேரத், விஜித் விஜயமுனி சொய்சா மற்றும் பஷீர் சேகுதாவூத் உள்ளிட்ட பிரதி அமைச்சர்கள் அமைச்சர்களாக நேற்று பதவியேற்றம் பெற்றுள்ளனர்.

இதற்கமைய சிரேஷ்ட அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சரவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை தற்போது 65ஆக உயர்ந்துள்ளது.

இது தவிர அமைச்சரவை மாற்றத்தின் போது, செயல்திட்ட அமைச்சர்களாக இருவர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் செயற்திட்ட அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 96 ஆக உள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் விபரம்,

**அமைச்சர்கள்:**

பெற்றோலிய வளத்துறை – அனுர பிரியதர்ஷன யாப்பா,

சுற்றாடல்துறை– சுசில் பிரேமஜயந்த, மின்சக்தி–பவித்ரா வன்னியாராச்சி, தொழில்நுட்பமற்றும்ஆராய்ச்சி–சம்பிக்கரணவக்க,

முதலீட்டு ஊக்குவிப்பு – லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன,

வனவிலங்குகள் சேவைகள் – விஜித் விஜயமுனி சொய்சா,

உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் – பசீர் சேகுதாவூத்,

கல்விச் சேவைகள் – துமிந்த திசாநாயக்க, தாவரவியல் மற்றும் பொது விநோதம் – ஜயரத்ன ஹேரத்,

சீனிக் கைத்தொழில் – லக்ஷ்மன் செனவிரத்ன

**திட்ட அமைச்சர்கள்:**

துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள்– நிர்மல் கொத்தலாவல

துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள்– ரோஹித அபே குணவர்த்தன

**பிரதி அமைச்சர்கள்:**

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா– பொருளாதார அபிவிருத்தி, எஸ்.எம்.சந்திரசேன – பொருளாதார அபிவிருத்தி, பைஸர் முஸ்தபா – முதலீட்டு ஊக்குவிப்பு, அப்துல் காதர் – சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், சுசந்த புஞ்சிநிலமே – பொருளாதார அபிவிருத்தி, சரத்குமார குணரத்ன – மீன்பிடி மற்றும் நீர் வழங்கல். (செ–11)

## மீள்குடியேற்றத்...

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீள குடியேற்றப்பட வேண்டும்.

பயங்கரவாத குழப்பங்களின் போது, வடக்கில் இருந்து சுமார் ஒரு இலட்சம் சிங்கள, முஸ்லிம் மக்கள் வடக்கில் இருந்து விரட்டப்பட்டனர். அவர்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை.

அவர்களின் காணி, சொத்துக்கள் இன்னும் இருக்கின்றன எனவும் ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதை எதிர்ப்பதாகவும் இந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் அது தமிழ் மக்களின் தாயகம் என்பது உறுதியாகிவிடும்.

இது சட்டரீதியானதும் நியாயமானதும் அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ–11)

## ஜெனிவாவில்...

செயலாளர் ஜேம்ஸ் மூர் தெரிவித்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த தடவை ஜெனீவா தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அமெரிக்காவும் 23 நாடுகளும் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ–11)

## அமெரிக்க குழு...

அத்துடன் நாட்டில் அண்மைக்காலமாக நிலவும் மதங்களுக்கு இடையேயான முறுகல் நிலை குறித்தும் அமெரிக்க குழுவினர் எதிர்க் கட்சித் தலைவரிடம் கேட்டறிந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளுமாயின் தேசிய பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வுகளை வழங்கும் எனவும் மனிதவுரிமைகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அமெரிக்கப் பிரதிநிதிகள் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் தெற்கு மற்றும் தென் கிழக்காசிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் விக்கிரம் ஜே. சிங் இந்த கலந்துரையாடலில் இணைந்து கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சர்வதேச நடவடிக்கைகள் தொடர்பான செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரட்னாயக்க சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார். (செ–11)

## வடக்கு மக்களின்...

யேற்றப்பட்ட மக்களைப் பார்வையிட்ட பின்னர் மு.ப 10.30 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் அக் கட்சியின் உறுப்பினர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

தமிழ்மக்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் இராணுவப் பிரசன்னம் அதிகரித்து காணப்படுவதோடு இராணுவப் புலனாய்வாளர்களால் தனி மனித கண்காணிப்புகளும் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ் மாணவர்களை அச்சுறுத்தி எமது சமூகத்தின் கல்வியினை சீரழிக்கும் முயற்சியிலும் அரசு இறங்கியுள்ளது.

தனியார், பிரதேச சபைக் காணிகள் இராணுவத்தால் அடாத்தாகக் கைப்பற்றப்பட்டு இராணுவமுகாம்கள் அமைக்கப்படுகின்றன.

கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு பலவிதமான கட்டுப்பாடுக்கள் விதிக்கப்படுகின்றன.

பிரதேச சபைத் தலைவர்கள்; உறுப்பினர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்படுவதோடு இளைஞர்களும் காரணமின்றி கைது செய்யப்படுகின்றனர்.

இவ்வாறான இராணுவத்தினரின் அச்சுறுத்தலாலும் பொருளாதார வீழ்ச்சியின் காரணத்தாலுமே தமிழ் மக்கள் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து செல்கின்றனர்.

குறிப்பாக அவுஸ்திரேலிய நாட்டிற்கு தமது உயிரைக்கூடப் பொருட்படுத்தாது கடல் வழியாக செல்கின்றனர் என கூறப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஆஸி குழுவினர், அப்படியாயின் இந்தியா செல்ல வேண்டியதுதானே ஏன் அவுஸ்திரேலியாவிற்கு வருகின்றனர் என கேள்வி எழுப்பினர்.

இலங்கையில் தமிழர்களிற்கு எவ்வாறு பாதுகாப்பு இல்லையோ அதேபோன்றதொரு சூழ்நிலையே இந்தியாவிலும் காணப்படுகிறது. இதனை விட ஏற்கெனவே இந்தியாவில் குடியேறியுள்ள எமது மக்களுக்கு இருபது வருடங்களாகியும் எவ்வித அடிப் படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலைப்பாட்டில் தான் எமது மக்கள் இந்தியாவினை தவிர்த்து அவுஸ்ரேலியாவினை தெரிவு செய்து அங்கே குடியேறுகின்றனர்.

2009ஆம் ஆண்டிற்கு பிற்பாடு இலங்கையில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது என சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் இலங்கை அரசு கூறிவருகின்றது. இதில் எந்த உண்மையுமில்லை.

இதற்கு பின்னர் கடந்த காலங்களில் காணாமல்போன, இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட, வன்முறைகளால் காயமடைந்தோரின் விபரங்களை அக்குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரியிருந்தனர்.

எனினும் அச்சமயம் மேற்குறித்த புள்ளி விபரங்கள் அவர்களிடம் இல்லாததால் மௌனித்துக் கொண்டு தற்போது அப்புள்ளி விபரங்கள் தம்மிடம் இல்லை என்றே கூறி விட்டனர்.

இச்சந்திப்பில் த.தே.கூட்டமைப்பின் பிரதேச, நகர சபைத் தலைவர்கள், உறுப் பினர்கள்; ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பு மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 12.30 மணிவரை இடம் பெற்றது.

மேலும் இச்சந்திப்பில் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டு நேரடியாகவே செய்தி சேகரிப்பில் ஈடுபட்டனர். (செ–4)

## தலைவலியை தீர்க்க...

நாட்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமது தேவைக்காக அமைச்சரவையினை மாற்றுவதன் மூலம் தீர்க்க முடியாது. அமைச்சரவைகளை மாற்றுவதன் காரணமாக அவர்கள் புதிய சந்ததியினை உருவாக்குகின்றனர்.

அரசாங்கம்அமைச்சர்களின் முகங்களை மாற்றினாலும், சுமை அனைத்தும் மக்களையே சென்றடைகின்றன.

தெளிவான முறையில் மின்சாரம் உபயோகம் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதிலும், அரசாங்கத்தில் இடம்பெறும் ஊழல், துஷ்பிரயோகம் என்பது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

குறிப்பாக, நேற்று இடம்பெற்ற அமைச்சரவை மாற்றங்கள் தொடர்பில் எதிர்க் கட்சிகளின் விமர்சனங்கள் வெளியாகி உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, முற்போக்கு சோஷலிச கட்சி ஆகியன தமது கருத்துக்களை முன்வைத்துள்ளன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜந்த கருணாதிலக கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் இயலாமையை மறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம் இது வெனத் தெரிவித்தார்.

ஜே.வி.பி இன் பிரசார செயலாளர் விஜித ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட மேலும் ஒரு சுமை. முன்னர் ஜம்போவாக இருந்த அமைச்சரவை தற்போது பிளாஸ்டிக் ஜம்போவாக இழுபட்டுள்ளது.

வரப்பிரசாதங்களை வழங்குவதன் மூலமாக உடைந்துவிழும் நிலையில் உள்ள அரசாங்கத்தை கட்டித் தூக்கி எழுப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவை இது.

அமைச்சரவையை மாற்றத்திற்கு உள்ளாக்கியமை பொது மக்களின் பிரச்சினையை தட்டிக்கழிக்கும் செயல் என முற்போக்கு சோஷலிச கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சமீர கொஸ்வத்த தெரிவித்துள்ளார். (செ–11)

## டெசோ தீர்மான...

பொருளாதாரம், பண்பாட்டு உரிமைகளை மீட்டு சமத்துவம், அமைதி நிறைந்த வாழ்வு மேற்கொள்ள இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஐ.நா. சபை தீவிர அழுத்தம் தரவேண்டும் என்று வற்புறுத்துவதற்காக ஐ.நா சபையை வலியுறுத்தும் வகையில் அதன் உறுப்பு நாடுகளை வற்புறுத்த கருணாநிதி தலைமையிலான டெசோ அமைப்பு முடிவு செய்துள்ளதாக தி.மு.க அறிவித்துள்ளது.

இதற்காக மு.க.ஸ்ராலின் தலைமையில் டெசோ அமைப்பை சார்ந்த திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலக்ஷ்மி ஜெகதீசன் மற்றும் தி.மு.க நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு ஆகியோர் டில்லி புறப்பட்டு செல்வர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து மு.க.ஸ்ராலின் தலைமையில் டெசோ அமைப்பினர் நேற்று டில்லிக்கு பயணம் மேற்கொண்டனர்.

டில்லியில் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையத்தின் 47 உறுப்பு நாடுகளின் தூதர்கள் ஆகியோரை டெசோ குழுவினர் நேரில் சந்தித்து கோரிக்கை மனுவொன்றைக் கையளிக்கவுள்ளனர் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

டெசோ அமைப்பினரால் கொடுக்கப்பட இருக்கின்ற கோரிக்கை மனுவில், இலங்கைத் தமிழர்கள் அமைதியாக வாழவும், இலங்கையில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும், அரசியல் தீர்வு காணவும், ஜெனிவாவில் முன்மொழியப்பட்டு ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு நிறைவேற்றிய தீர்மானத்தை உடனே நடைமுறைப்படுத்தவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்குமாறு அந்த உறுப்பு நாடுகளை கேட்டுக் கொள்ள இருப்பதாக தி.மு.க மேலும் கூறியுள்ளது. (செ–11)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

Gjpa tFg;Gf;fs; மிக விரைவில்.. T.P.021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(நக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

**Deutsch, Dutch, French, English**

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் – டொச், நெதர்லாந்து – டச்
தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
குறிப்பு: இவ்வாரம் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464


## மரண அறிவித்தல்

### இளையதம்பி இலட்சுமி (தங்கம்மா)

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை (நெல்லியடி முருகன் வீதி) வதிவிடமாகவும் கொண்ட திருமதி இளையதம்பி இலட்சுமி (தங்கம்மா) அவர்கள் நேற்று (28.01.2013 ) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாவியார் இளையதம்பியின் அன்பு மனைவியும், வைரமுத்து, செல்லம்மா, சின்னத்துரை, திருமேனி (இளைப்பாறிய செயலாளர்-வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை), தர்மலிங்கம் (நூலகர்-சரசாலை பொது நூலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

லதா, வள்ளிப்பிள்ளை, கனகமணி, சுப்பிரமணியம், சிவாஜினி, அமரர் சிவகுமாரன், கமலநாதன், யோகநாதன், விமலநாதன், லோகநாதன், செந்தில்நாதன், சரோஜினி, காயத்திரி, கிருஷாந்தி, கார்த்திகா, வாகினி, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2013) செவ்வாய்க்கிழமை நெல்லியடி முருகன் வீதி மீசாலை கிழக்கில் அமைந்துள்ள தர்மலிங்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 4 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெல்லியடி முருகன் வீதி,
மீசாலை கிழக்கு.

தகவல்:
இ.திருமேனி(மகன்)

(சி-2264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.